# உதயன்

சுடர் : 36 | கதிர் : 195 | புதன்கிழமை | வைகாசி 26 ஆம் நாள் 09 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## நேற்று தொற்று 2,637

கொழும்பு, ஜூன் 9
இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 637 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள் 15

# தொற்றின் தீவிரம் குறையும் வரை பயணத்தடை தொடரும்

### இராணுவத் தளபதி திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 9
கொரோனாப் பெருந்தொற்றின் தீவிரத்தன்மை தணிந்த பின்னர்தான் பயணத்தடை தளர்த்தப்படும். அதுவரை பயணத்தடையை தளர்த்த வாய்ப்பில்லை என்று தெரிவித்தார் இராணுவத் தளபதியும், கொரோனாக் கட்டுப்பாட்டுச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா. 15

## வடக்கில் கொரோனா 91!

யாழ்ப்பாணம், ஜூன் 9
வடக்கு மாகாணத்தில் நேற்று 976 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனைகளில் 64 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள் 15

யாழ். பல்கலை

## நுண்கலைக்கழக அனுமதிக்கு இணைய வழியில் பரீட்சைகள்!

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்தின் இராமநாதன்நுண்கலைக்கல்லூரியில்நுண்கலைமாணி (பரதம்), நுண்கலைமாணி (சங்கீதம்), நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) ஆகிய நான்கு வருடக் கற்கை நெறிகளின் 2020/2021ஆம் கல்வியாண்டுக்காக 15

## பயணத்தடை மக்களை பாதாளத்தில் தள்ளியது

### நாடாளுமன்றில் கூட்டமைப்பு கடும்பிடி

கொழும்பு, ஜூன் 9
'இலங்கையில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளில் இராணுவத்தினர் தொடர்ந்தும் செயற்பட்டால் மக்கள் அழிவதை யாராலும் தடுக்க முடியாது

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.
அரசின் பயணத் தடையால் கிடைத்த பலன் 15

## நயினை அம்மன் திருவிழா பிற்போடப்பட்டது!

நயினாதீவு, ஜூன் 9
வரலாற்றுப் பிரசித்திபெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா பிற்போடப்பட்டுள்ளது என்று ஆலய அறங்காவலர் சபையினர் 15

## மோசமான காலநிலையே கப்பல் தீப்பற்ற காரணம்

### சதித்திட்டம் ஏதுமில்லையாம்

கொழும்பு, ஜூன் 9
எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்ற மோசமான காலநிலைதான் காரணம். இதில் சதித்திட்டம் என்று எதுவும் இல்லை என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார். 15

வெளிமாவட்ட பக்தர்களுக்கு

## மடுத் திருவிழாவில் அனுமதி இல்லை

மன்னார், ஜூன் 9
மடுப் பெருந்திருவிழாவுக்கு (ஆடி மாதப் பெருவிழாவுக்கு) வெளிமாவட்டங்களில் இருந்து பக்தர்கள் கலந்துகொள்ள முடியாது என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார். கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாகவே இந்த 13

முதல் தடவையாக ஒரே நாளில்

## கொரோனா பலி 54

மொத்தம் 1.844

கொழும்பு, ஜூன் 9
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 54 பேர் உயிரிழந்துள்ளனர். அரச தகவல் திணைக்களம் நேற்றி 13


செய்திகள் மற்றும் விளம்பரங்களை உதயனில் பிரசுரிக்க....

செய்தி
021 493 0000
077 1209994

விளம்பரம்
021 493 1111
071 6182182


உயிர்க்கொடை செய்துள்ள

## ஊடகவியலாளர்களை கொச்சைப்படுத்தாதீர்!

### ஹேமந்த ஹேரத்தின் கருத்துக்கு யாழ். ஊடக அமையம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூன் 9
உன்னதமான ஊடக சுதந்திரத்துக்காக உயிர்கொடுத்த ஊடகவியலாளர்களை மூன்றாம் தரத்தில் பணிபுரிந்த ஊடகவியலாளர்கள் என சுகாதார அமைச்சின் ஊடக

செய்தித் தொடர்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் வெளியிட்டுள்ள கருத்துக்கு யாழ். ஊடக அமையம் வன்மையான கண்டனங்களை பதிவுசெய்துள்ளது. அந்த அமைப்பு 13

கட்டுப்பாட்டை மீறி ஒன்றுகூடல்கள்

## பருத்தித்துறையில் பலர் கட்டாயத் தனிமையில்!

வடமராட்சி, ஜூன் 9
நாட்டில் நடைமுறையில் இருக்கும் கட்டுப்பாட்டுக்கான முடக்க நிலையை மீறி வீடுகள் மற்றும் கோவில்களில் மக்களை ஒன்றுகூட்டி நிகழ்வுகளை நடத்தியவர்கள் பருத்தித்துறையில் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப் 15




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கோத்தா அரசு ஒரு விலைமாது

*சஜித் அணி தாக்குதல்*

கொழும்பு, ஜுன் 9

தற்போதைய அரசு ஒரு விலைமாது போன்று செயற்படுகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். பாலியல் தொழிலில் ஈடுபடும் பெண்ணொருவர் தனது தொழிலுக்காக ஒருவரைக் கவர்வதற்கு நன்றாக ஆடையுடுத்தி, வாசனைத் திரவியங்களைப் பயன்படுத்திக்கொண்டு வீதியில் நின்று அழைப்பார். அந்த விலைமாது போன்றே தற்போதைய இந்த அரசும் பொய்க் கதைகளைக் கூறிக்கொண்டு நாட்டை வெளிநாடுகளுக்கு விற்று வருகின்றது.

நாம் அமெரிக்காவுக்கு, சீனாவுக்கு, இந்தியாவுக்கு எதிரானவர்கள் அல்லர். வேறு நாடுகளுக்குக்கூட எதிரானவர்கள் அல்லர்.

ஆனால், இலங்கை அரசுக்கு எதிரானவர்கள். ஏனெனில், இந்த அரசுதான் இலங்கையை அழித்தும் விற்றும் வருகின்றது' - என்றார். (ஓ.22)

# காலங்கடந்த செயற்பாடுகளையே கோத்தாபய அரசு முன்னெடுக்கிறது

## பொன்சேகா சாடல்



**கொழும்பு, ஜுன் 9**

**கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான தீர்மானங்களை அரசு சரியான நேரத்தில் எடுக்கத் தவறிவிட்டது. இந்த விடயத்தில் அரசின் தற்போதைய செயற்பாடு குதிரை பாய்ந்து போன பின்னர் லாயத்தை மூடுவது போன்றே இருக்கின்றது.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரசாயன உர நெருக்கடி நீண்ட வருடங்களாகவே உள்ளது. சகல அரச காலத்திலும் அதனை இறக்குமதி செய்துள்ளனர். இந்நிலையில், தற்போது விவசாயிகள் பெரும் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். விவசாயிகளுக்கு சரியான நேரத்தில் உரம் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. விவசாயிகளின் எதிர்பார்ப்புகள் மீறப்பட்டுள்ளன. அவர்கள் தற்போது நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கொரோனாவால் உயிர் அச்சுறுத்தலுடனேயே மக்கள் வாழ்கின்றனர். நாங்கள் கொரோனாவைக் கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய தீர்மானங்களை சரியான நேரத்தில் எடுக்கவில்லை. உலகளாவிய தொற்றாக இதனை அறிவித்தபோது நாங்கள் இதன் பாரதூர தன்மையைப் புரிந்துகொள்ளவில்லை. குதிரை பாய்ந்துபோன பின்னர் லாயத்தை மூடுவதைப் போன்றதாகவே அரசின் செயற்பாடுகள் இருக்கின்றன.

தடுப்பூசித் திட்டத்தை அமெரிக்காவில் கடந்த வருடம் மே மாதத்தில் இருந்தே ஆரம்பித்துள்ளனர். இந்த நாட்டில் அதுபற்றி நாங்கள் கூறும்போது அதனைக் கணக்கில் எடுக்கவில்லை. இப்போது அமெரிக்காவில் 55 வீத மானோருக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. அங்கு அதனை அவர்கள் வெற்றிகரமாக கட்டுப்படுத்துகின்றனர். இந்நிலையில், தற்போது அதிக விலைக்குத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. நாட்டில் 6 லட்சம் பேருக்கு இரண்டாவது தடுப்பூசி இல்லாமல் இருக்கின்றது. அத்துடன் ஆயிரம் ரூபா பணம் கொடுத்து தடுப்பூசியைச் செலுத்தியவர்களும் உள்ளனர். இவ்வாறான விடயங்களுக்கு இடமளிக்கக் கூடாது- என்றார். (ஓ.22)



# சேதனப்பசளைப் பயன்பாட்டை எந்தச் சவால் வந்தாலும் முன்னெடுங்கள்

## ஜனாதிபதி கோத்தாபய தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 9

சேதனப் பசளையைப் பயன்பாட்டுக்கு கொண்டும்வரும் போது எதிர்நோக்கும் சவால்களைப் பொருட்படுத்தாது, மக்களின் நலனுக்காக மக்கள் பிரதிநிதிகள் முன்னோக்கிச் செல்லவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தபாய தெரிவித்தார்.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர்களுடன் நேற்றுமுன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஆரோக்கியம் மற்றும் வினைத்திறன்வாய்ந்த பிரஜைகளை உருவாக்குவதற்கு, நச்சுத்தன்மையற்ற உணவுக்கான மக்களின் உரிமைகள் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்காக, **விவசாயத்துறைக்குள் சேதனப் பசளைப் பாவனையைக் கொண்டு** வருவது அரசின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம், சில தரப்பினரின் விமர்சனங்களுக்கு உள்ளானபோதும், எதிர்காலத் தலைமுறையின் நலனுக்காக அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று, ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும், அடுத்த போகம் வரையில் தேவையான உரம் போதுமானளவு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. எனவே, அனைத்து விவசாய நடவடிக்கைகளையும் தடையின்றி மேற்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சேதன விவசாயத்துக்கு மாறுவது அரசு திடீரென எடுத்த முடிவன்று. 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனத்திலும் கடந்த வரவு- செலவுத் திட்டத்திலும், இது குறித்த அரசின் நிலைப்பாடு முன்வைக்கப்பட்டிருந்தது. எனினும், சேதனப்பசளை தொடர்பில் விவசாயிகளுக்கு அறிவூட்டப்படாமை தேவையற்ற அச்சத்துக்கு காரணமாக அமைந்துள்ளது.

சேதனப்பசளை விவசாயத்துக்கு, இலங்கையில் அதிக வாய்ப்புகள் உள்ளன. இந்த நிலைமாற்றக் காலப்பகுதியில் விவசாயிகள் முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் கஷ்டங்களை நிர்வகிக்க, அதிக பட்ச நிவாரணங்களை வழங்குவதே அரசின் கொள்கையாகும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

சில தசாப்தங்களாக இரசாயனப் பசளைகளைப் பயன்படுத்திய காரணத்தால், அதிகளவானவர்கள் பல்வேறு தொற்றா நோய்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலைமைகளில் இருந்து எதிர்காலத் தலைமுறையைப் பாதுகாப்பது நாட்டில் உள்ள அனைவரதும் பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (ஓ.இ)

# யானை வாலைத்தான் தூக்கியுள்ளது தும்பிக்கையைத் தூக்கினால் தெரியும்

*சஜித் அணியைச் சீண்டிய மஹிந்தானந்த*



கொழும்பு, ஜுன் 9

யானை தற்போது வாலைத்தான் தூக்கியுள்ளது. இன்னமும் தும்பிக்கையைத் தூக்கவில்லை. அப்படித் தூக்கும்போது விரைவில் உங்கள் (சஜித் அணியினர்) பதவிகள் பறிபோகும் என்று அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்த விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றம் வரவுள்ளார். அப்படி வரும் அவருக்கு ஆதரவளிக்க ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர். இதற்கான சம்மதக் கடிதத்தில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை கையொப்பம் இட்டுள்ளனர்.

இதனை அறிந்துதான் நீங்கள் (ஐக்கிய மக்கள் சக்தியினர்) உங்கள் கட்சியினரை அழைத்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது என்ற தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளீர்கள். அந்தக் கூட்டத்துக்கு உங்களின் 32 நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமே வந்தார்கள். ஹரின் பெர்னாண்டோ கூட வரவில்லை- என்றார். (ஓ.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார
## தொழிற்சங்கங்கள் மீண்டும் போராட்டம்

கொழும்பு, ஜுன் 9
கொரோனா பரவல் காரணமாக சுகாதாரத்துறையினர் எதிர்கொள்ளும் பொதுவான நெருக்கடிகளுக்கு தீர்வை வழங்கக்கோரி, ஒன்றிணைந்த சுகாதார தொழிற்சங்க ஒன்றியம் நாளைமறுதினம் 11ஆம் திகதி மீண்டும் போராட்டம் நடத்தவுள்ளது. 28 தொழிற்சங்கங்கள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ஒ.5)




## சைனோஃபோர்ம் இரண்டாவது 'டோஸ்' ஏற்றல் ஆரம்பம்!

கொழும்பு, ஜுன் 9
சைனோஃபோர்ம் தடுப்பூசியின் இரண்டாவது 'டோஸ்' ஏற்றும் நடவடிக்கை நேற்று ஆரம்பமாகியுள்ளது என, கொழும்பு மாநகர சபையின் சுகாதார மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் 90 ஆயிரம் பேருக்கு சைனோஃபோர்ம் தடுப்பூசியின் முதலாவது 'டோஸ்' ஏற்றப்பட்டது.

'மே 9 ஆம் திகதி முதல் டோஸைப் பெற்றவர்கள் ஜுன் 9 ஆம் திகதி இரண்டாவது டோஸைப் பெறலாம். மே 10 ஆம் திகதி முதல் டோஸ் எடுத்தவர்கள், ஜுன் 10 ஆம் திகதி இரண்டாவது டோஸைப் பெறலாம். முதல் டோஸ் ஏற்றப்பட்ட அதே இடத்தில் இரண்டாவது டோஸ் ஏற்றலும் முன்னெடுக்கப்படும்' என்று அவர் குறிப்பிட்டார். (ஒ.5.இ)

## நிலைமை மோசம் ஊரடங்கே தீர்வு

*பேராசிரியர் அர்ஜுன வலியுறுத்து*

கொழும்பு.ஜுன் 9
நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமை மிக மோசமாக உள்ளது. எனவே முழு ஊரடங்கை நடைமுறைப் படுத்தி, மக்களைக் கட்டுப்படுத்துவதே ஒரே வழி என்று களனி பல்கலைகழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் அர்ஜுன டி சில்வா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முழு ஊரடங்கின் மூலமே முதலாவது கொரோனா அலை நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டது. தற்போதைய நிலைமை மிக மோசமாகவுள்ளது. இதன் காரணமாக ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு ஆராய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-4)

# தகவல்கள் திரட்டலில் பெரும் குளறுபடி!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடுமையாகச் சாடுகிறது

**கொழும்பு, ஜுன் 9**

**கொரோனாத் தொற்றுத் தொடர்பான தகவல்கள் தொற்று நோய் தடுப்புப் பிரிவால் சரியான வகையில் திரட்டப்படுவதில்லை. தரவுகளுக்கு இடையே குளறுபடிகள் காணப்படுகின்றன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் நேற்றுத் தெரிவித்தது.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. இதன் போது கருத்துத் தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம்,

தொற்றுநோய்ப் பிரிவு சரியான வகையில் தகவல்களைத் திரட்டுவதில்லை. தரவுகளுக்கு இடையே குளறுபடிகள் காணப்படுகின்றன. தரவுகள் சேகரிக்கும் விதம், பகுப்பாய்வு செய்யும் விதம் என்பனவற்றை தொற்று நோய் தடுப்புப் பிரிவு வினைத்திறனாக மாற்ற வேண்டும்.

கடந்த மே மாதத்தில் 793 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. களுத்துறை மாவட்டத்தில் மாத்திரம் 123 உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. இதுவே இலங்கையில் அதிக உயிரிழப்புக்கள் பதிவான மாவட்டமாகியுள்ளது. அங்கும் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் தொடர்பான அறிக்கையிடுதல்கள் சரியான இடம்பெறவில்லை. மேலும் மருத்துவமனையில் சேர்க்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்தே செல்கின்றது. ஆரம்பத்தில் மேல் மாகாணத்தில் மாத்திரம் இந்த நிலைமை காணப்பட்டாலும் தற்போது எல்லா மாகாணங்களுக்கும் இது பரவலடைந்துள்ளது - என்றார்.

இதேவேளை சுகாதார அமைச்சு தனது இணையத்தளத்தில் 31 ஆயிரத்து 466 தொற்றாளர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் தொற்று நோய்ப் பிரிவின் இணையத் தளத்தில் அந்த எண்ணிக்கை 36 ஆயிரத்து 287 எனக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## இதுவா பயணக்கட்டுப்பாடு?



நவாலிப் பகுதியில் நேற்றுக் காலை எடுக்கப்பட்ட படம்.

# அஸ்ராஜெனகா தடுப்பூசி இரகசியமாக வழங்கல்!

கொழும்பு, ஜுன் 9
மேல் மாகாணத்தைச் சேர்ந்த சிலருக்கு, தென் மாகாணத்தில் வைத்து அஸ்ராஜெனகாவின் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அஸ்ராஜெனகாவின் முதலாவது டோஸ் ஏற்றியவர்களில் சுமார் 6 லட்சம் பேருக்கு இரண்டாவது டோஸ் ஏற்றப்படவில்லை. மேல் மாகாணத்தைச் சேர்ந்த பலரும் இரண்டாவது டோஸ் ஏற்றுவதற்காக பல இடங்களிலும் தேடியலைகின்றனர்.

அண்மையில் கொழும்பு அபயராம விகாரையில் இவ்வாறு இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டமை சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதனையடுத்து தென்மாகாணமான காலியில் வைத்து மேல் மாகாணத்தைச் சேர்ந்த சிலருக்கு அஸ்ராஜெனகாவின் இரண்டாவது டோஸ் ஏற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான செய்தி சிங்கள ஊடகங்களில் வெளிவந்த நிலையில்,



அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என இராஜாங்க அமைச்சரும் பேராசிரியருமான சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார். (ஒ.5.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினமும் 40 பேரை பலிகொடுக்கும் அரசு

## தாதியர் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 9

கொரோனாத் தொற்று அபாயத்தை அறிந்தும், அதை விலைக்கு வாங்கியுள்ள அரசு, தினமும் 40 பேரைப் பலிகொடுத்து வருகின்றது.

இவ்வாறு தேசிய தொழிற்சங்க முன்னணியின் தலைவரும், அரச தாதி அதிகாரிகள் சங்கத்தின் தலைவருமான சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

புஞ்சிபொரள்ளையில் உள்ள அரச தாதி அதிகாரிகள் சங்கத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனாவைக் கட்டுப்படுத்த உலக சுகாதார அமைப்பு வழங்கிய பரிந்துரைகளை கொஞ்சம் கூட மதிக்காத அரசு, தினமும் 48 உயிரிழப்புக்கள் ஏற்படும் நிலைமைக்கு நாட்டைத் தள்ளியுள்ளது. தெரிந்தே இந்தக் குற்றத்தைச் செய்துள்ளது. இதனால் தினமும் சுமார் 40 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழக்கின்றனர். வீடுகளிலும் இறப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த நிலைமையை முகாமைத்துவம்செய்ய அரசு எடுக்கும் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை.

அரச மருத்துவமனைகளில் நோயாளர்களின் கொள்ளளவைத் தாண்டி, நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

நல்லாட்சி அரசு அறிந்துகொண்டே ஈஸ்டர் ஞாயிறன்று தாக்குதல் நடைபெற இடமளித்தது என்று குற்றஞ்சாட்டும் அரசு, கொரோனாத் தொற்று நிலைமையை அறிந்தே, நாட்டுக்குக் கொரோனாவைக் கொண்டுவந்து, மக்களை இறப்புக்குள் தள்ளியுள்ளது - என்றார். (எ- 4)

# தீவிர சிகிச்சையில் 82 தொற்றாளர்கள்

கொழும்பு,ஜூன் 9



அரச மருத்துவமனைகளில் உள்ள தீவிர சிச்சைப் பிரிவுகளில் கொரோனாத் தொற்றாளர்கள் 82 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

191 சிகிச்சைப் பிரிவுகளில் கொரோனாத் தொற்றாளர்களுக்காக 29 ஆயிரத்து 530 படுக்கைகள் தயார்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 26 ஆயிரம் படுக்கைகள் நிரம்பியுள்ளன.

அதேவேளை நாளாந்தம் 2 ஆயிரத்து 800 தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இவர்களுக்குச் சமமான நோயாளர்கள் சிகிச்சை முடிந்து வீடுகளுக்குத் திரும்புகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# இந்திய நிறுவனத்தால் பி.சி.ஆர். இயந்திரம்!

கொழும்பு.ஜூன் 9

இந்திய நியூ டயமன்ட் கடர்ஸ் நிறுவனத்தால், 65 லட்சம் ரூபா மதிப்பிலான பி.சி.ஆர். இயந்திரமொன்று, பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் செந்தில் தொண்டமான் ஒருங்கிணைப்புடன் இயந்திரம் பிரதமரிடம் கையளிக்கப்பட்டது.

அந்த இயந்திரத்தை சுகாதார அமைச்சின் பரிந்துரைகளுக்கமைவாக, தியத்தலாவ மருத்துவமனைக்குக் கையளிக்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கினார் என்று பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (எ-4)

# 1,028 பேர் கைது

கொழும்பு.ஜூன் 9



கொரோனாத் தொற்றுக் காலத்தில் நடைமுறையில் உள்ள, தனிமைப் படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் ஆயிரத்து 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

அதற்கமைவாக கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 25 ஆயிரத்து 886 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (எ-4)



# 65 வீதமானோருக்கு விரைவில் தடுப்பூசி

கொழும்பு,ஜூன் 9

நாட்டில் 65 வீதமான மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு அரசு எதிர்பார்த்துள்ளது.

அந்த வகையில் ஏற்கனவே 10 வீதமான மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

மேல் மாகாணம் உட்பட 9 மாவட்டங்களில் தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக சுமார் 23 லட்சம் பேருக்கு இதுவரை தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

3 லட்சத்து 53 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களைப் பெற்றுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)

# ரூ.5 ஆயிரத்தைக் கோரி அதிகாரிமீது தாக்குதல்

கொழும்பு,ஜூன் 9

கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் ரூபா 5 ஆயிரம் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை என்பதால், ஏமாற்றமடைந்த பெண் ஒருவர் அரச அதிகாரியொருவரைத் தாக்கியுள்ளார்.

இந்தச் சம்பவம் இரத்தினபுரி கொலொன்னகெம்பனே கிராம சேவகர் பிரிவில் நடந்துள்ளது.

விகாரையொன்றில் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்பட்டபோது, குறித்த பெண் தனக்கும் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்குமாறு அதிகாரியைக் கோரியுள்ளார். அவருக்கு பணம் இல்லை என்று கூறப்பட்டதால், கோபமடைந்த பெண் இரும்புக் கம்பி ஒன்றால் அதிகாரியைத் தாக்கியுள்ளார்.

குறித்த அதிகாரி சிகிச்சைக்காக கொலொன்ன ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

# பிரான்ஸ் கடற்படையினரின் சுற்றுலாப்பயணம் ஆரம்பம்

கொழும்பு,ஜூன் 9

இலங்கைக்கு வந்துள்ள பிரான்ஸ் கடற்படையினர், தங்களது சுற்றுலாப் பயணங்களை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

அதற்கமைவாக 101 பேர் யால சரணாலயத்துக்கும், 86 பேர் உடவலவ தேசிய சரணாலயத்துக்கும், 235 பேர் ஹபரண பிரதேசத்துக்கும் சுற்றுலாப் பயணத்தை ஆரம்பித்துள்ளனர்.

பிரான்ஸ் கடற்படையைச் சேர்ந்த 750 பேர், இரண்டு கப்பல்களில், நேற்றுமுன்தினம் கொழும்புதுறை முகத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் எதிர்வரும் 11 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களின் சுற்றுலாப் பயணங்கள் அனைத்தும் சுற்றுலாத்துறை அமைச்சின் மேற்பார்வையில் இடம் பெறவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# 13 1/2 லட்சம் பேருக்கு ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு

நாடு முழுவதும் கொரோனாத் தொற்றால் வாழ்வாதாரத்தை இழந்த 13 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு, 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்று சமுர்த்திப் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆறாயிரத்து 700 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக சமுர்த்தி பெறும் குடும்பங்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட்டது.

அடுத்த கட்டமாக மாற்றுத்திறனாளிகள்,



முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்கள் ஆகியோருக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வசூலிப்பும் உயிர் பறிப்பும்!

வடமராட்சி கிழக்கில் குடும்பத் தலைவர் ஒருவர் வாகனக் குத்தகைத் தவணைக் கட்டணத்தைச் செலுத்த முடியாத நெருக்கடியால் தவறாக முடிவு எடுத்து உயிரிழந்திருக்கின்றார். இத்தனை காலமும் தவணைக் கட்டணங்களைச் செலுத்தி வந்த அவர், நாட்டின் இப்போதைய சூழ்நிலையால் தவணைக் கட்டணத்தைச் செலுத்த முடியாது நெருக்கடியில் சிக்கியிருக்கிறார்.

நிதி நிறுவனத்தின் நெருக்குதல்களே அவரை இந்த முடிவுக்குத் தள்ளிவிட்டது என்று உறவினர்கள் இறப்பு விசாரணைகளில் தெரிவித்திருக்கிறார்கள். கடன் அழுத்தத்தால் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருக்கிறார் என்பதை ஒரு செய்தியாகக் கடந்துவிட முடியாது.

நாட்டில் கொரோனாத் தொற்றுத் தீவிரமடைந்திருக்கும் நிலையில், அனைத்தும் செயலிழந்துள்ளன. நாடு முழுவதும் பயணத் தடை விதிக்கப்பட்டு, பொதுமக்களின் வாழ்வாதாரங்கள் முடங்கியுள்ளன. கொரோனாத் தொற்றுத் தீவிரத்தைத் தணிக்க இத்தகைய நடவடிக்கைகள் அவசியம் என்கின்றபோதும், பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவசியம்.

பயணத் தடை விதிக்கப்பட்டிருப்பதால் வீடுகளுக்குள் முடங்கிக்கொள்ளுமாறு கூறும் அரசு, அத்தியாவசியப் பொருள்களையும், சிறுதொகை உதவிக் கொடுப்பனவையும் வழங்கிவிட்டால் போதுமானது என்று நினைத்துவிடக் கூடாது. இவற்றைவிடவும் மக்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஏராளம் இருக்கின்றன. அவற்றுக்கும் சரியான முறையில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முயலவேண்டும். ஆனால் அரசு அவ்வாறு நடக்காதமையே மக்கள் அதிகம் பயணக் கட்டுப்பாட்டை மீறவும் காரணமாக இருக்கின்றது.

கடன் வசூலிப்பைத் தள்ளிவைக்குமாறு வங்கிகளுக்கு அறிவித்திருக்கின்ற அரசு, நிதி நிறுவனங்கள் தொடர்பில் எந்தக் கவனிப்பும் இல்லாது இருக்கின்றது. அதிகமானவர்கள் வங்கிகளையும் விட நிதி நிறுவனங்களிலேயே கடன்களையும், வாகனங்களைக் குத்தகைக்கும் பெற்றிருப்பதால் இந்த பயணத் தடைக் காலத்தில் அதிக நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். நிதி நிறுவனங்களில் கடன் பெற்றவர்களும், வாகனங்கள் குத்தகைக்குப் பெற்றவர்களும் ஒப்பீட்டளவில் வடக்கு மாகாணத்தில் அதிகம்.

பயணத் தடைக் காலத்திலும் கடன் தவணைக் கட்டணங்களையும், வாகனக் குத்தகை தவணைக் கட்டணங்களையும் கட்டுமாறு நிதி நிறுவனங்கள் அழுத்தங்கள் கொடுக்கின்றன. பயணக் கட்டுப்பாட்டு நேரத்திலும் கடன்களை வசூலிக்க வீடுகளுக்கு வருபவர்கள், தயவு தாட்சணியம் இல்லாது நடந்து கொள்கின்றனர். கொரோனாத் தொற்று இடரால் வாழ்வாதாரம் இன்றி வீடுகளுக்குள் முடக்கியிருக்கும் மக்கள், இவ்வாறான நெருக்கடிகளால் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர்.

உயிரிழந்த குடும்பஸ்தரும் இவ்வாறான மன அழுத்தத்துக்கு உட்பட்டமையே தவறான முடிவெடுப்பதற்குக் காரணம் என்பதை மறுக்க முடியாது. நிதி நிறுவனங்களின் கடன் வசூலிக்கும் காலத்தை, தற்போதைய சூழ்நிலை கருதி தள்ளி வைக்க வேண்டும். இல்லாதுவிட்டால் இவ்வாறான அநியாயமான உயிரிழப்புக்கள் நாளுக்கு நாள் ஏற்பட ஆரம்பித்துவிடும். இந்த விடயத்தில் அரசும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியது மிக அவசியம்.



# ஊடகர்களின் கொலைகளை அரசு கொண்டாடுகின்றது

## லசந்த விக்ரமதுங்கவின் மகள் விளாசல்

**கொழும்பு, ஜூன் 9**

**இலங்கையில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர்கள் மூன்றாம் தர ஊடகவியலாளர்கள் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் தெரிவித்ததன் ஊடாக, இலங்கை அரசு ஊடகவியலாளர்களின் கொலைகளைக் கொண்டாடுகின்றது என்பதற்கு மேலதிக சான்று என, சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியராக இருந்து கொல்லப்பட்ட லசந்த விக்ரமதுங்கவின் மகள் தெரிவித்துள்ளார்.**

'ஒரு ஊடகவியலாளரை அல்லது எவரையும் கொல்ல எந்தக் காரணமும் கூற முடியாது. இந்தக் கருத்துக்கள் எனது தந்தை போன்றவர்களின் கொலைகளை அரசு கொண்டாடுகிறது என்பதற்கு மேலதிக சான்றுகளாகும். ஹேமந்த ஹேரத்தை பதவியில் இருந்து நீக்க வேண்டும்' என்று அவர் ருவிற்றரில் பதிவிட்டுள்ளார். (ஒ.4.5)

## ஊடகவியலாளருக்கு கொலை மிரட்டல்!

கொழும்பு, ஜூன் 9

ஊடகவியலாளரும், ஜனாதிபதி ஊடகப் பிரிவின் முன்னாள் பணிப்பாளருமான சமுத்தித சமரவிக்கிரமவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸ்மா அதிபருக்கு அவர் முறைப்பாடு செய்துள்ளார்.

யாரால் இந்த அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று சந்தேகிப்பவர்கள் தொடர்பான விவரங்களை விரைவில் வெளியிடுவேன் என்று சமுத்தித தெரிவித்துள்ளார்.

'எனது கேள்வியின் காரணமாக சிலர் தனிப்பட்ட முறையில் மற்றும் அரசியல் ரீதியாகப் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் உண்மையை வெளிப்படுத்துவது எனது கடமை' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் பிறந்தநாள் கொண்டாட்டம் ஏற்பாடு செய்த மொடல் அழகி பியூமியுடன் தொடர்புடைய விடயங்கள் மற்றும் அமைச்சர் சரத் வீரசேகரவின் தலையீடுகள் தொடர்பாக சமுத்தித சில விடயங்களை வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5.இ)

# ஹேரத்தின் கருத்து மிகவும் தவறானது

## கெஹெலிய விளக்கம்

கொழும்பு, ஜூன் 9

பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் ஊடகவியலாளர்கள் தொடர்பில் வெளியிட்ட கருத்து தவறானது. 'மூன்றாம் வகுப்பு' ஊடகவியலாளர்கள் எவரும், ஊடக அமைச்சில் பதிவுசெய்யப்படவில்லை என்று ஊடக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.



பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஹேமந்த ஹேரத் ஊடக மாநாடொன்றில், கடந்த காலத்தில் கொல்லப்பட்ட சில ஊடகவியலாளர்கள் மூன்றாம் வகுப்பு ஊடகவியலாளர்கள் என்று விமர்சித்திருந்தார்.

இதற்கு விளக்கமளித்த ஊடக அமைச்சர், ஹேரத்தின் கருத்துக்கள் தங்களைக் குறிப்பவையாக ஊடகவியலாளர்கள் எடுத்துக் கொண்டால், அதற்கு நான் வருந்துகிறேன். எந்தவொரு உறுப்பினரும் மூன்றாம் வகுப்பு என்று அழைக்கப்படுவதை தான் விரும்பவில்லை - என்றார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா, மன்னார், முல்லைக்கும் வருகின்றது கொரோனாத் தடுப்பூசி

## ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர் தெரிவிப்பு

**வவுனியா, ஜூன் 9**

**யாழ்ப்பாணத்தைத் தொடர்ந்து, மன்னார், முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கும், இந்த வாரத்துக்குள் கொரோனாத் தொற்று தடுப்பூசி வழங்கப்படவுள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினரும், மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவரது ஊடகப் பிரிவு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது;

மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பரவிவரும், கொவிட் 19 பெருந்தொற்றைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அதற்கான தடுப்பூசிகளை உடனடியாகப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் வன்னி, நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் சுகாதார அமைச்சு மற்றும் உயரதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி உடனடியாக இத்தடுப்பூசியை வன்னி மாவட்டத்துக்கு வழங்கிவைக்குமாறு அவசர கோரிக்கை ஒன்றை முன்வைத்திருந்தார்.

இதன் பின்னர் இடம்பெற்ற கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் வவுனியா, மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கான கொரோனாத் தொற்று தடுப்பூசிகளை இவ்வாரம், முதல் முதற்கட்டமாக வழங்குவதற்கான ஒப்புதலை அமைச்சு வழங்கியுள்ளது.

இதற்கான துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றுள்ளது.

இதேவேளை வன்னி தேர்தல் மாவட்டத்துக்கான தடுப்பூசியின் தேவை தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ மற்றும் சாள்ஸ் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், கோரிக்கைகளை முன்வைத்து, ஜனாதிபதி மற்றும் துறை சார்ந்தவர்களுக்கு கடிதங்களை அனுப்பியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ப)





## முல்லையைச் சேர்ந்தோருக்கு உலர் உணவுப் பொதிகள்

முல்லைத்தீவு, ஜூன் 9

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பல குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

புலம்பெயர் நிக்சன் அறக்கட்டளை நிதியத்தால் இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

செல்வபுரம், முள்ளியவளை ஐயனார்குடியிருப்பு, தண்ணீரூற்று, வற்றாப்பளை மற்றும் கேப்பாப்புலவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோருக்கே உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ-13)

## கொரோனாவை விரட்ட நீர்வேலியில் வழிபாடு

சுன்னாகம், ஜூன் 9

உலகெங்கும் வாழ்கின்ற மக்கள் அனைவரும் கொரோனாத் தொற்றிலிருந்து விடுபட வேண்டி யாழ்ப்பாணம் கோப்பாய் நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் முதன்மைக் குரு சிவஸ்ரீ தியாக. மயூரகிரிக்குருக்களின் அருளாசி உரையும், வேதபாராயணமும் நடைபெறவுள்ளன.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்து ஆலயங்கள் தோறும் கொரோனாத் தொற்றில் இருந்து விடுபட சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாதிக்கப்பட்டோருக்கு உணவுப்பொதிகள்





மன்னார், ஜூன் 9

கொரோனாத் தொற்றால் நாட்டில் ஏற்பட்டுள்ள முடக்க நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 70 குடும்பங்களுக்கு நேற்று உலர் உண வுப் பொதிகள் வழங்கப்பட்டன. மன்னார் பிரதேச செயலர் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட 15 கிராமங்களில் உள்ள குடும்பங்களுக்கே மன்னார் மாவட்ட தாய் நிலம் அறக்கட்டளையின் மன்னார் மாவட்ட பணிமனையால் இவ் உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-56)


## மரண அறிவித்தல்

**தோற்றம்** 18 . 09 . 1943



**மறைவு** 05 . 06 . 2021

### திரு. சின்னத்தம்பி இராசரத்தினம்

**முன்னாள் பொது முகாமைளார் (மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவு சங்கம்) மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரியர் (யாழ் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை)**

மாதகலை பிறப்பிடமாகவும் சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி-இராசரத்தினம் அவர்கள் கடந்த (05.06.2021) சனிக்கிழமை மாதகலில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குணமணிதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ் சுதுமலை வடக்கு தமிழ் கலவன் பாடசாலை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசமணி, புவனேஸ்வரி மற்றும் சோதி (கொலண்ட்), ஜெயராணி (சண்டிலிப்பாய்), சிவபாலன் (சுவிஸ்), நிர்மலா (மாதகல்) ஆகியோரின் மூத்த சகோதரனும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, தவராசா, தவச்செல்வம் மற்றும் விஜயராசா, குணதேவி, சிவாஜி ஆகியோரின் மைத்துனரும், விஷாந்தினி - பகீரதன் (சுவிஸ்), தர்விகா - ஜெனார்த்தனன் (லண்டன்), மகாதேவா - றஞ்சினி தேவி (பிரான்ஸ்), மஞ்சுளா - ஞானசீலன் (பிரான்ஸ்), தயாளினி - கலைச்செழியன் (பிரான்ஸ்), பிரமிளா - யோகேஸ்வரன் (கனடா), சுகன்யா - விக்னேஸ்வரன் (கனடா), இரகுமலா - துஷ்யந்தன் (கனடா), சிவகுமரன் - செல்வபாலினி (பிரான்ஸ்), சிவறஞ்சினி - ஜெயக்குமார் (கனடா), அனித்தா - யதீஸ் (சண்டிலிப்பாய்), தர்ஷன்-கிரிஷா (லண்டன்), லக்ஷன் (பிரான்ஸ்), தனுஜா - சுதாகரன் (பிரான்ஸ்), தயாளன்-சங்கீதா (கனடா), கிருஷாந்தன் (ஜேர்மனி), கோஷிகன், யாழினி (மாதகல்) ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (06.06.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இடம்பெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: சகோதரிகள்**
**திருமதி. சிவாஜி - நிர்மலா**
**021 2211 286, 077 302 4449**
**திருமதி. விஜயராசா - ஜெயராணி**
**021 205 2832**

**மாதகல் கிழக்கு,**
**மாதகல்.**






# 45 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

கிளிநொச்சி, ஜூன் 9

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்த 45 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சியில் இயங்குகின்ற இரு நிறுவனங்களின் நிதியில் இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. (ஐ-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை வழிமறித்து மக்கள் கடும் எதிர்ப்பு

### ஐவர் பொலிஸாரால் கைது

**முல்லைத்தீவு, ஜூன் 9**
**புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்த மூவர் மற்றும் கொவிட் சுகாதாரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறிய இருவர் உள்ளிட்ட ஐவர், புதுக்குடியிருப்பு பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.**



சுதந்திரபுரம் கிராமத்தில் மட்டும் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் 16 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் 14 நாள்கள் தனிமைக் காலத்தை நிறைவுசெய்யாது மீண்டும், பணிக்குச் செல்வதை விரும்மாத கிராம மக்கள், அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்த நிலையில், நேற்றுக் காலை, புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்கு, உட்பட்ட சுதந்திரபுரம் பகுதியில் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களை ஏற்றிக்கொண்டு சென்ற பஸ்கள், வீதியின் குறுக்கே தடைகள் ஏற்படுத்தப்பட்டு, வழிமறிக்கப்பட்டன.

கிராமத்தில் இருந்து குறித்த பஸ்களில் சென்ற பணியாளர்கள் இறக்கப்பட்டனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் படையினர் ஆகியோர் அங்கிருந்த மக்களைத் துரத்தினர். பொலிஸாரின் பாதுகாப்புடன் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் பணிக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச்சென்ற பஸ்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர், மற்றும், கொவிட் சுகாதாரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறினர் என்ற குற்றச்சாட்டுக்களில் ஐவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். (ப-19)




## சுகாதார விதிமுறைகளை மீறிய நிதி நிறுவனங்களுக்கும் தனிமை


### வவு. சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை

வவுனியா, ஜூன் 9
வவுனியா நகரப்பகுதியில் அமைந்துள்ள நிதி நிறுவனங்கள் மற்றும் வியாபார நிலையங்கள் ஆகியவற்றில் நேற்று திடீர் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்த சுகாதார அதிகாரிகள், சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தல்களை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் சில நிதி நிறுவனங்கள், மற்றும் வியாபார நிலையங்களைத் தனிமைப்படுத்தினர்.

வவுனியாவில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்துவரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பல்வேறு நடவடிக்கைகள் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில், வவுனியா கடைவீதியில் அமைந்துள்ள நிதி நிறுவனங்கள், மற்றும் வியாபார நிலையங்களில் நேற்றுக் காலை விசேட சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பேணாமை மற்றும் ஊழியர்களின் எண்ணிகைகளை அதிகமாக அழைத்து செயற்ப்பட்டமை, ஆகிய குற்றச்சாட்டுக்களுக்காக இரண்டுக்கும் மேற்பட்ட பிரபல நிதிநிறுவனங்கள் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டன.

இதேவேளை கிராமப்புறப் பகுதிகளிலும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் பலசரக்கு விற்பனை நிலையங்களும் சுகாதாரப் பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி யூட்பீரிஸ், பொலிஸ் பொறுப்பதிகாரி மானவடு மற்றும் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோரால் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (ப-110)



## பயணக் கட்டுப்பாட்டின்போது காலைக்கடன் கழிக்கவும் தடை

### புன்னாலைக்கட்டுவனில் இராணுவம் கேபிளால் கடும் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூன் 9
புன்னாலைக்கட்டுவன் வடக்கு கப்பன்புலப் பகுதியில் காலைக் கடனை கழிக்கச் சென்று வீடு திரும்பிய நபர் ஒருவர் மீது, வீதியால் வந்த பாதுகாப்புத் தரப்பினர் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர் தெரிவிக்கையில்;

உடுவில் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புன்னாலைக்கட்டுவன் வடக்கு கப்பன் புலம் பகுதியில் சுமார் 10க்கு மேற்பட்ட குடும்பங்கள் மலசலகூடம் இன்றி வாழ்ந்து வருகின்றோம். நாம் காலைக்கடன்களை நிறைவேற்ற அருகிலுள்ள பனம் காணிக்குச் சென்றுவருவது வழக்கம். நேற்று முன்தினம் காலை, காலைக் கடனைக் கழித்து விட்டு வீடு நோக்கி வந்தபோது, வீட்டின் அருகே நின்ற பாதுகாப்புத் தரப்பினர் எங்கு சென்று வருகிறாய் என விசாரித்தனர்.

இதன்போது பின்னால் வந்த பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் "ஓடு வீட்ட" எனக் கூறியபடி என்னை கேபிள் ஒன்றால் தாக்கினார். இறுதிப் போரின்போது எனது ஒரு காலில், துப்பாக்கிக் குண்டு துழைத்துள்ளது. தலையில் துப்பாக்கிச் சன்னம் இன்றும் உள்ளது. இவ்வாறு போரால் பாதிக்கப்பட்டு புன்னாலைக்கட்டுவன் பகுதியில் குடியேறிய எனக்கு இன்றுவரை மலசலகூட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படவில்லை. இந்த நிலையில் பாதுகாப்புத் தரப்பினர் என்னைத் தாக்கியது எனக்கு மிகுந்த மன வேதனை தருகின்றது -என்றார். (ப-20)


## இரு மாதங்களேயான குழந்தைக்குத் தொற்று

### தந்தை ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்

கிளிநொச்சி, ஜூன் 9
கிளிநொச்சி, கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தருமபுரம் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மாதக் குழந்தைக்கு கொரோனாத் தொற்று ஏற்றப்பட்டுள்ளமை நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்ட அண்டிஜென் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த குழந்தையின் தந்தை கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பணியாற்றுபவர். அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரது மனைவி மற்றும் இரண்டு மாதக் குழந்தை ஆகியோருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் குழந்தைக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. தாய்க்கு அண்டிஜென் பரிசோதனையில் தொற்று இல்லை என முடிவு வந்த போதும் அவருக்கு இருக்கும் அறிகுறிகளில் தொற்றுக்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதனால் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்றுமுன்தினம் கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் 14 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அண்டிஜென் பரிசோதனையில் ஏழு பேருக்குத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ப-214)






## தனிமைப்படுத்தலுக்கு வெளிநாட்டுப் பயணிகளை ஏற்றிவந்த பஸ் விபத்து

வவுனியா, ஜூன் 9
வவுனியா, ஓமந்தை பனிக்கன் நீராவிப்பகுதியில் தனிமைப்படுத்தலுக்குச் சென்ற பஸ் ஒன்று நேற்று அதிகாலை விபத்துக்குள்ளாகியது.

குறித்த பஸ் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய பயணிகளை அழைத்துக்கொண்டு கிளிநொச்சி பூநகரி தனிமைப்படுத்தல் நிலையம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தது. இதன்போது ஓமந்தை பனிக்கன் நீராவிப்பகுதியில் வீதிக்கரையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த கனரக வாகனத்துடன் மோதியதில் விபத்துக்குள்ளானது. பஸ்ஸில் 7 பேர் பயணம் செய்த நிலையில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்து தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ப-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஆயர் இல்லக் காணியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு

முல்லைத்தீவு, ஜூன் 9

**முல்லைத்தீவு, கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உப்புமாவெளி பிரதேசத்தில், சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறு மணல் அகழப்படும் காணி யாழ். ஆயர் இல்லத்துக்குச் சொந்தமானது என்றும் தெரிவிக்கப்படுகிறது.**



குறித்த விடயம் தொடர்பில் ஆராய தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பீற்றர் இளஞ் செழியன் அண்மையில் சம்பவ இடத்துக்கு சென்று நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தார். இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்;

உப்புமாவெளி பிரதேசத்தில் 5 ஆயிரம் டிப்பர்களில் ஏற்றக்கூடிய மண் குவியலாகக் குவிக்கப்பட்டுள்ளது. இது ஆயர் இல்லத்துக்குச் சொந்தமான காணி. தற்போது ஆயர் இல்லக் காணியில் இரண்டு வகையான மணல் அகழ்வுகள் நடைபெறுகின்றன. ஒன்று அனுமதியுடனும், மற்றையது அனுமதி அற்ற முறையிலும் நடக்கின்றது. இது குறித்து ஆயர் இல்லத்தினர் வெளிப்படையாக அறிவிக்கவேண்டும்.

சட்டவிரோதமான இந்த நடவடிக்கை குறித்து மாவட்டத்தில் இருக்கக் கூடிய இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் தகுதிவாய்ந்த அதிகாரிகள் ஆகிய பலர் இருந்தும் இதனைத் தடைசெய்யமுடியாமல் இருப்பதற்கு காரணம் என்ன? இது குறித்து அனைத்து தரப்பினரும் பதில் வழங்கவேண்டும். குறிப்பாக யாழ். ஆயர் இல்லம் இதற்குப் பதிலளிக்கவேண்டும் - என்றார். (ப- 13)

## சதொச விற்பனை நிலையத்தை நானாட்டானிலும் அமையுங்கள்

மக்கள் கோரிக்கை

மன்னார், ஜூன் 9

மன்னார், நானாட்டான் பிரதேசத்தில் சதொச விற்பனை நிலையம் இதுவரை அமைக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவிக்கையில்;

நாட்டில் மழை, வெள்ளம், புயல் மற்றும் கொரோனா போன்ற இடர் காலங்களில் அத்தியாவசிய பொருள்களுக்கும் கட்டுப்பாடுகள் நிலவும்போது தனியார் விற்பனை நிலையங்களில் அத்தியாவசிய பொருள்களை அதிக விலைக்கு விற்கின்றார்கள். மன்னார், மடு மற்றும் மாந்தை மேற்கு போன்ற பகுதிகளில் சதொச விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள போதும், நானாட்டான் பிரதேசத்தில் இன்னும் சதொச விற்பனை நிலையம் அமைக்கப்படவில்லை. இது தொடர்பாக பல தடவைகள் உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை. கடந்த வருடம் கொரோனா முடக்கத்தின் ஆரம்பத்தில் இது தொடர்பாகப் பேசப்பட்டு தற்பொழுது அந்த முயற்சிகள் யாவும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. கொரோனா மூன்றாவது அலையின் தாக்கத்தால், பயணத்தடையின்போது அத்தியாவசிய பொருள்கள் பல இடங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இதனால் ஏழை மக்கள்தான் பாதிக்கப்படுகின்றார்கள். எனவே உரிய அதிகாரிகள் கவனம் எடுத்து நானாட்டான் பிரதேசத்தில் சதொச விற்பனை நிலையம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்க வேண்டும் - என்றனர். (ப-213)

## தவறான முடிவெடுத்து ஒருவர் சாவு

கொடிகாமம், ஜூன் 9

தவறான முடிவெடுத்து இரு பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கொடிகாமம் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொடிகாமம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த பரஞ்சோதி நிரஞ்சகுமார் (வயது - 29) என்ற இளம் குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். இவரது சகோதரி மற்றும் இரு சகோதரர்களும் ஏற்கனவே தவறான முடிவு எடுத்து உயிரிழந்தனர் எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இறப்புத் தொடர்பில் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி விசாரணையை மேற்கொண்டு, சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு கொடிகாமம் பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டது. (ஐ-159.9)

## மரக்கடத்தல் முறியடிப்பு; சந்தேகத்தில் இருவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 9

சட்டவிரோத மரக் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் மாங்குளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். கடத்தலில் ஈடுபட்ட இரு பட்டா ரக வாகனங்களுடன் மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டன.

பழையமுறிகண்டி காட்டுப்பகுதியில் இருந்து சட்டவிரோதமான முறையில் மரங்களை ஏற்றி இரணைமடு பகுதிக்கு கொண்டுசெல்ல முற்பட்டபோதே நேற்றுமுன்தினம் அதிகாலை மாங்குளம் பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-12)



## நிர்வாகத்தினருடன் மட்டுமே இடம்பெற்றது வவு. புதூர் நாகதம்பிரான் ஆலய பொங்கல்

வவுனியா, ஜூன் 9

வரலாற்றுச் சிறப்புமிக்க வவுனியா, புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்தப் பொங்கல் விழா நேற்று முன்தினம் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஆலய நிர்வாகத்தினருடன் மட்டும் இடம்பெற்றது.

400 வருடங்களுக்கு மேல் பழமையான புதுமைமிகு புதூர் நாகதம்பிரானின் அருளைப் பெறுவதற்காகவும், நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காகவும் பக்தர்கள் வந்தபோதும், சுகாதாரப் பிரிவினரால் அனுமதியளிக்கப்படவில்லை. பக்தர்கள் ஆலயத்துக்கு வந்தபோதும், புதூர் பிரதான நுழைவாயில், ஆலய முன்பகுதி நுழைவாயில் என்பவற்றில், பொலிஸார் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் தடைகளை ஏற்படுத்தி, அவர்களைத் திருப்பி அனுப்பினர். நேர்த்திக் கடனுக்காகக் கொண்டு வந்த கோழி, பால் மற்றும் ஆலயத்துக்கான பொருள்களை ஆலய நுழைவாயில்களில் வைத்து ஆலய நிர்வாகத்தினர் பெற்றுக்கொண்டனர்.

ஆலயத்துக்கு பணம் செலுத்துபவர்களுக்கான பற்றுச்சீட்டுக்களும் வழங்கப்பட்டன. அத்துடன், புதூர் நாகதம்பிரான் ஆலய வீபூதி, நூல் மற்றும் விசம் தீண்டியவர்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தப்படும் புதூர் நாகதம்பிரான் ஆலய மண் என்பவற்றையும் ஆலய நிர்வாக னத்தினர் ஆலயத்தின் நுழைவாயிலில் வைத்து பக்தர்களுக்கு வழங்கினர். (ப-18)

# வீட்டுத் திட்டத்தை முழுமைசெய்ய மிகுதிப் பணத்தை தந்துதவுங்கள்

பெரியகுளம் கட்டைக்காடு மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 9

வீட்டுத் திட்டத்துக்கான மிகுதிப் பணத்தை வழங்காததால், நிரந்தர வீட்டு வசதி இன்றி பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்று கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த நல்லாட்சி அரச காலத்தில் எமக்கு வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது. அதற்காக 78 ஆயிரம் ரூபா நிதி மட்டுமே வழங்கப்பட்டது.

அதை வைத்து வீட்டுக்கான அத்திபாரம் இட்டோம். ஆனாலும் வீட்டைக் கட்டி முடிப்பதற்கான மிகுதிப் பணம் இன்றுவரை தரவேயில்லை.

நாம் நாளாந்தம் தினக்கூலி வேலைசெய்து அதில் வரும் வருமானத்தைக் கொண்டே வாழ்ந்துவரும் நிலையில், எம்மால் அந்த வீட்டை முழுமைப்படுத்த முடியாதுள்ளது. இதனால், மழை காலங்களில் மழை வெள்ளத்தாலும், வெயில் காலங்களில் வெப்பத்தாலும் வீட்டில் வசிக்க முடியாமலும் வாழ்ந்து வருகிறோம். இதே வேளை தற்காலிக வீடுகளில் உள்ள நாம், இரவுவேலைகளில் விஷப் பூச்சிகளின் அச்சத்துடனேயே வாழ்ந்து வருகிறோம். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை பெரும் அவதிக்கு உள்ளாகியுள்ளோம். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை நேரில் சென்றும் எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை எனவே நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகள் இது தொடர்பில் கவனமெடுத்து, எமக்கான நிதியைப் பெற்றுத் தரவேண்டும் - என்றனர்.

இதே பிரச்சினை வடக்கின் ஏனைய இடங்களிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளத்துடன் கலந்த கழிவு எண்ணெய்

## சப்புஸ்கந்த விவகாரம் தொடர்பில் விசாரணை

கொழும்பு, ஜூன் 9

**சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் கழிவு எண்ணெய், நீரில் கலந்துள்ள சம்பவம் தொடர்பில், கண்டறிவதற்கும், பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்குவதற்கும் விசேட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.**

எண்ணெய் கசிவு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு 14 நாள்களுக்குள் அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

அதேவேளை பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்குவதற்காகவும் விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் பெய்த கடும் மழை காரணமாக, சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலைய உலையில் இருந்து, எண்ணெய் கசிந்து மழை நீருடன் கலந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் குழிகள் மற்றும் தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் எரிபொருள் விடயத்தில் போதிய மேற்பார்வையின்மை காரணமாகவே, உலையில் எண்ணெய் நிரம்பி வழிந்தது என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கமான தேசிய சேவை சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (எ-4)

## பாதுகாப்பான ஹொட்டல்களில் மதுபான விற்பனைக்கு அனுமதி

கொழும்பு, ஜூன் 9

பயணக் கட்டுப்பாடுகளின்போது "பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பான நிலையிலுள்ள முதற்தர ஹொட்டல்களில் மதுபானங்களை விற்பனைசெய்வதற்கு மதுவரித் திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த ஹொட்டல்களில் உள்நாட்டு, வெளிநாட்டு விருந்தினர்களுக்கு மதுபானத்தை விற்பனைசெய்ய முடியும் என்று மதுவரித் திணைக்கள உதவி ஆணையாளர்களுக்கு, மதுவரி ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை சுகாதார மற்றும் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப மது விற்பனை உரிமங்கள் மற்றும் அனுமதிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி, அருகிலுள்ள உரிமம் பெற்ற மொத்த விநியோகஸ்தர்களிடமிருந்து மதுபானங்களைக் கொள்வனவு செய்வதற்கும் இந்தக் ஹொட்டல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (எ-4)

## பேக்கரி உணவுகளின் விலை அதிகரிக்கும்?

### யாழில் அப்படியொரு நிலை இதுவரை இல்லை

கொழும்பு,ஜூன் 9

இனிப்புப் பண்டங்கள் மற்றும் பேக்கரி உணவுகளின் விலை விரைவில் அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூலப்பொருள்கள், போக்குவரத்து, அந்நியச்செலாவணி மற்றும் வரிகள் ஆகியவற்றுக்கு செலவுகள் அதிகரித்துள்ளதால், விலை அதிகரிக்க வேண்டியுள்ளது என்று துறைசார்ந்த உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு மாதங்களில் மூலப்பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது. இதனால் எமது வியாபாரங்களின் இருப்பைத் தக்கவைத்துக்கொள்வதில் பெரும் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ளோம். உற்பத்திப் பொருள்களின் விலையில் அதிகரிப்புகளை மேற்கொள்ளாமல், செலவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டில் நிலவும் தொற்றுப் பரவலுடனான சூழல் காரணமாக, சுகாதார வழிமுறைகள் மற்றும் மருத்துவத்துக்கு செலவுகள் அதிகரித்துள்ளன. குறிப்பாக முற்காப்பு நடவடிக்கைகளுக்காக பெருமளவு நிதியைச் செலவிட வேண்டியுள்ளது.

மூலப்பொருள்கள், பொதியிடல் பொருள்கள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் ஆகியவை கடந்த இரண்டு மாதங்களில் பெருமளவு அதிகரித்துள்ளன. ஏற்றுமதியும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு துறைகளும் தொடர்ந்து இயங்குவதற்கு எதிர்காலத்தில் உற்பத்திப் பொருள்களின் மீது விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டியது தவிர்க்க முடியாது - என்றனர்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் பேக்கரி உற்பத்திப் பொருள்களின் விலைகளை அதிகரிக்க வேண்டிய தேவை இதுவரை இல்லை என்று யாழ்ப்பாண மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்தனர். (எ,4,5)

## பணத்தை கொள்ளையிட்ட விமானப் படையினர் கைது



கொழும்பு,ஜூன் 9

முச்சக்கரவண்டியில் பயணித்த இருவரை மிரட்டிப் பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கற்பிட்டி பிரதேசத்தில் நடந்துள்ளது.


இந்தச் சம்பவம் தொடர்பில் விமானப் படையினர் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களால் ஒரு லட்சம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## டெல்டா வைரஸுடன் இலங்கையர் அடையாளம்

### மெல்பேர்னில் பரபரப்பு

கொழும்பு, ஜூன் 9



ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் தற்போது பரவத் தொடங்கியுள்ள கொரோனா வைரஸுக்கு, இலங்கையிலிருந்து சென்ற நபரே காரணம் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மெல்பேர்ன் நகரில் புதியவகை 'டெல்டா' அல்லது இந்திய வகை கொரோனா வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 8 ஆம் திகதி இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியா சென்ற நபர் ஒருவர் மூலமே அங்கு இந்த வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது.

ஹொட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 40 வயது நபர் ஒருவரை சோதனைக்கு உட்படுத்திய வேளை, அவருக்கு கொரோனாத் தொற்றிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நபர் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியா திரும்பியதைத் தொடர்ந்து ஹொட்டலில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். கடந்த 23 ஆம் திகதி தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## சீரற்ற வானிலை; 19 பேர் உயிரிழப்பு

கொழும்பு,ஜூன் 9

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக இதுவரை 19 பேர் உயிரிழந்துள்ளனர். ஒருவர் காணாமல் போயுள்ளார். 5 பேர் காயமடைந்துள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2 லட்சத்து 19 ஆயிரத்து 870 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டின் 10 மாவட்டங்களில் இந்தப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் நிலையம் தெரிவித்துள்ளது. (எ-4)

### மரக்கறி, பழங்கள்

## விற்கமுடியாத விவசாயிகளிடம் அரசு கொள்வனவு செய்யும்!

கொழும்பு,ஜூன் 9

பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் விவசாயிகளால் விற்பனைசெய்ய முடியாத மேலதிக மரக்கறிகள் மற்றும் பழங்களைக் கொள்வனவு செய்து, அரசின் ஊடாக விநியோகிக்கும் திட்டத்தை செயற்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதற்கமைவாக விவசாயிகளால் விற்பனைசெய்ய இயலாத மரக்கறிகள் மற்றும் பழவகைகளை மாவட்ட விலைமைனுக்குழுவின் விலையின் அடிப்படையில், மாவட்டச் செயலர்கள் மூலம் கொள்வனவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு கொள்வனவுசெய்யப்படும் மரக்கறிகள் மற்றும் பழங்கள் பயணத்தடை முடிவுறும் வரை கொவிட் சிகிச்சை நிலையங்களுக்கும், அரச மருத்துவமனைகளுக்கும், முப்படையினர் மற்றும் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தங்கியுள்ள இடைத்தங்கல் முகாம்களுக்கும், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களுக்கும், தேவைக்கேற்ப இலவசமாக வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (எ-4,44)

## நாளை ஓய்வூதியம்

கொழும்பு,ஜூன் 9

நாடளாவிய ரீதியில் நாளை வியாழக்கிழமை ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக ஓய்வூதியம் பெறுவோருக்கான, போக்குவரத்து வசதிகள் முப்படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர்களே வங்கிகளுக்கும் அழைத்துச் செல்வர் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சிக் கவிழ்ப்புக்காக அமெரிக்கர்கள் ஊடுருவலா?

## இராணுவத்தளபதி பதிலளிக்க மறுப்பு

கொழும்பு, ஜூன் 9

அமெரிக்காவின் யுஎஸ்எயிட் நிறுவனத்தால் இலங்கையில் நடைமுறைப்படுத்தும் திட்டத்தில் பங்கேற்கும் அதிகாரிகள் என்ற பெயரில், அமெரிக்காவின் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் குழு இலங்கைக்கு வருகைதந்துள்ளது என செய்திகள் வெளியாகியிருந்தன. இது தொடர்பில் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவிடம் வினவியபோது, அது தொடர்பில் தன்னால் பதிலளிக்க முடியாது என்று குறிப்பிட்டார்.

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைக்கான அமெரிக்காவின் உதவிப் பொருள்களுடன் கட்டுநாயக்கா விமான நிலையத்துக்கு அமெரிக்க விமானம் 5 நாள்களுக்கு முன்னர் வந்திருந்தது. அந்த விமானத்தில் 4 அமெரிக்கர்களும் வந்திருந்தனர். அவர்கள் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இந்த குழுவினர் இலங்கைக்கு வருகை தருகின்றமை தொடர்பில் பாதுகாப்பு அமைச்சுக்கோ அல்லது வெளிவிவகார அமைச்சுக்கோ அறிவிக்கப்படவில்லை என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

வெளிவிவகார அமைச்சும் இந்த விடயம் தொடர்பில் விசாரணைகளை நடத்தி வருகின்றது. மியன்மாரில் இடம்பெற்ற இராணுவ சூழ்ச்சி நடவடிக்கைகளின்போது, மியன்மாரில் இருந்த அமெரிக்க ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியொருவரும், இந்தக் குழுவில் இடம்பிடித்துள்ளமை விசாரணைகளின் ஊடாக தெரிய வந்துள்ளது.

அதேவேளை, குறித்த நபர், சுற்றுலா விசாவின் ஊடாக, பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வருகைத்தந்துள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கே இராணுவத் தளபதி பதிலளிக்க மறுத்துள்ளார். (ஓ.இ.5.22)

# மருத்துவப் பொருள்களை வழங்கியது சுவிஸ் அரசு

இலங்கைக்கு ஒரு தொகை மருத்துவப் பொருள்களை சுவிஸ்லாந்து அனுப்பியுள்ளது. அன்டிஜென் சோதனைக் கருவிகள், வென்டிலேட்டர்கள், ஒட்சிசன் செறிவூட்டிகள் மற்றும் சோதனைப் பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கை அதிகாரிகள் வழங்கிய தேவைகளின் அடிப்படையில், சூரிச்சிலிருந்து 16 தொன் எடையுள்ள பொருள்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகத்தின் ஒத்துழைப்புடன், நியாயமான முறையில் பொருள்கள் உரியவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)



# பயணக் கட்டுப்பாடு தளர்வு இதுவரையில் முடிவில்லை!

## அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு,ஜூன் 9

நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகளால் பெற்றுக்கொண்ட பயன்களின் அடிப்படையில், மாற்று நடவடிக்கைகள் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் மிக ஆழமாக அவதானித்த பின்னரே தீர்மானங்கள் எடுக்கப்படும். குறிப்பாக நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அவதானம் செலுத்துவோம். இதுவரை நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள பயணக் கட்டுப்பாடுகளால் பெற்றுக்கொண்ட பயன்களை தொடர்ந்தும், தக்கவைத்துக்கொள்ளும் வகையிலான மாற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (எ-4)

# கொரோனா ஒழிப்புக்கு முழு ஆதரவு தாருங்கள்

## மக்களிடம் மஹிந்த மன்றாட்டம்

கொழும்பு, ஜூன் 9

"தொற்று நிலைமையாக இருப்பினும், இடர்நிலைமையாயினும் எந்தச் சூழ்நிலைகளிலும் மக்களுடன் அந்தச் சவாலை ஏற்றுக்கொள்ள ஓர் அரசு என்ற ரீதியில் நாம் தயார். பயணத் தடையின்போது மக்களுக்குப் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படும் என அறிந்தபோதிலும் ஓர் உயிரின் மதிப்பறிந்து அரசு முன்னெடுத்துவரும் கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டங்களுக்கு முழு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்."

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

புதிய களனி பாலம் முதல் அத்துருகிரிய வரையான 16.4 கிலோமீற்றர் நீளமான அதிவேக நெடுஞ்சாலை மற்றும் கெடம்பே, கொஹுவல, கொம்பனித்தெருவில் நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை, பாலதக்கச மாவத்தை மற்றும் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படும் மேம்பாலங்களின் பணிகளை நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அலரி மாளிகையில் இருந்தவாறு குறித்த வேலைத்திட்டங்களின் ஆரம்ப நிகழ்வு பிரதமரின் தலைமையில் காணொலி தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்றது.

அங்கு பிரதமர் உரையாற்றும் போது,

"சுபீட்சத்தின் நோக்கு கொள்கைக்கு அமைய நாம் நாட்டைக் கட்டியெழுப்ப மக்களுக்கு உறுதியளித்தோம். கொரோனாத் தொற்றுக்கு மத்தியிலேனும் நாட்டின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நிறுத்த வேண்டாம் என ஜனாதிபதி எம் அனைவருக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொரோனாத் தொற்றுநோயைக் கட்டுப்படுத்த வைத்தியர்கள் உள்ளிட்ட மருத்துவ ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் அதை ஆதரிக்கும் மக்கள் பெரும் தியாகங்களைச் செய்கிறார்கள்.

சிலருக்கு அதனைச் சகித்துக் கொள்ள முடியாதுள்ளது. அவர்கள் இங்கேயும் அங்கேயும் சொல்லி அதை நாசப்படுத்த முயற்சிக்கின்றனர். தவறான பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். தடுப்பூசி போடும்போது அவர் இறந்துவிடுவார் என்றும் கூறினர். மக்களைப் பயமுறுத்த முயன்றனர்." - என்றார். (கு-22)

# அமெரிக்க முகவர் நிறுவனத்தின் திட்டங்களை விரைவுபடுத்துங்கள்

## கோத்தா பணிப்பு

கொழும்பு, ஜூன் 9

சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் (யுஎஸ்எயிட்) நிதி உதவியின் கீழ் இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளை விரைவுபடுத்துமாறு ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பணிப்புரை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாயவுக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவர் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ரீட் ஜே. ஈஷலிமனுக்கும் இடையில், நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின் போதே இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

யுஎஸ்எயிட் நிதியுதவியின் மூலம் தற்போது நாட்டில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் சில திட்டங்கள், பல்வேறு காரணங்களுக்காக செயலற்றுக் காணப்படுகின்றன. இதற்கு ஏதுவான காரணங்கள் பற்றிக் கண்டறிந்து, அத் திட்டங்களை விரைவாக நிறைவுசெய்வதற்கு இதன்போது இணக்கம் காணப்பட்டது.

'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்துக்கு ஏற்ப, நாட்டில் ஒரு மிகப்பெரிய அபிவிருத்திச் செயன்முறை திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, யுஎஸ்எயிட்டின் உதவிகளின் ஊடாக மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேலும் வினைத்திறனாக செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தை, ஜனாதிபதி எடுத்துரைத்துள்ளார்.



அமெரிக்காவால் நன்கொடையாக வழங்கப்பட்ட 6 மில்லியன் டொலர்களுக்கும் அதிக பெறுமதியுடைய கொரோனாத் தொற்றொழிப்புக்கான மருத்துவ மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்களை ஏற்றிக்கொண்டு, விசேட விமானமொன்று அண்மையில் இலங்கையை வந்தடைந்தது. மேற்படி உதவிகளுக்காக நன்றியைத் தெரிவித்த ஜனாதிபதி, கொரோனாத் தொற்றை எதிர்த்துப் போராடுவதற்கான அரசின் வேலைத்திட்டம் பற்றியும் விளக்கினார். (ஓ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘டீல்’ அரசியல்வாதிகளின் சதியை தோற்கடிப்போம்

## ஐ.ம.ச. எம்.பிக்கள் உறுதி

**கொழும்பு,ஜூன் 9**

**மக்களால் நிராகரிக்கப்படும் அரசைப் பாதுகாக்க முயற்சிக்கும் டீல் அரசியல்வாதிகளின் சதி முயற்சிகளை விரைவில் தோற்கடிப்போம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உறுதியளித்தனர்.**

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போது கட்சிக்கும், அதற்கு ஆதவு வழங்கும் கட்சிகளுக்கும் இடையில் முரண்பாடுகள் மற்றும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன என்று சமூக ஊடக வலையமைப்புகளில் வெளியிடப்பட்ட போலியான செய்திகளுக்கு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு கண்டனம் தெரிவித்தது.

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால வெற்றிகளுக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மீது முழு நம்பிக்கை தெரிவித்து பிரேரணையொன்றை ஏகமானதாக நிறைவேற்றினர்.

மக்களால் நிராகரிக்கப்படும் அரசைப் பாதுகாக்க முயற்சிக்கும் டீல் அரசியல்வாதிகள் இதற்குப் பின்னால் உள்ளனர். இந்தச் சதியைத் தோற்கடிக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழு உறுதியளித்தது.

எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் லகஸ்மன் கிரியெல்ல மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம், பாட்டாலி சம்பிக்க ரணவக்க, மனோ கணேசன் ஆகியோரால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணையை, நாடாளுமன்ற உறுப்பினர்கள் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ரஞ்சித் மத்தும பண்டார, ராஜித சேனரத்ன, அசோக அபேசிங்க ஆகியோர் வழிமொழிந்தனர். அதனை அனைத்து உறுப்பினர்களும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டனர். (எ-4)

# சமூக ஊடகங்களை ஒடுக்க விசேட கண்காணிப்புக்குழு

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன் 9

போலியான தகவல்கள் பரப்புவோரைக் கைதுசெய்கின்றோம் என்ற போர்வையில், சமூக ஊடகங்களை ஒடுக்குவதற்கு அரசு முயற்சிக்கின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டியுள்ளது.

நாடாளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக் கூடியது.

இதன்போது சமூகவலைத்தளங்களைக் கண்காணிக்க விசேட சி.ஐ.டி. குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார தெரிவிக்கையில்,

போலியான தகவல்களைப் பரப்புவோரைக் கைது செய்ய நடவடிக்கை என்ற போர்வையில், சமூக ஊடகங்கள் தணிக்கைக்கு உட்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. எவராவது போலியான தகவலைப் பரப்பினால் அதற்கு நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதை ஏற்கின்றோம். ஆனால், சமூக ஊடகங்களை மிரட்டி, நாட்டின் உண்மையான நிலைவரம் தொடர்பான தகவல்கள் மக்களுக்குச் சென்றடைவதைத் தடுப்பதற்காக, ஒடுக்குமுறையைக் கையாண்டு அரசு கைது படலத்தை ஆரம்பித்துள்ளது- என்றார். (எ-4,44)

# போலித்தகவல் ஒருவர் கைது

கொழும்பு,ஜூன் 9

ஜனாதிபதி அலுவலகத்தின் இணையத்தளம் உட்பட சில அரச இணையத்தளங்கள் மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொய்யான தகவல்களைப் பரப்பினார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் கொழும்பில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சமூக வலைத்தளங்களில் சைபர் தாக்குதல் தொடர்பில் பகிரப்பட்ட தகவல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# சமூக வலைத்தளங்களில் 17 வீத கணக்குகள் போலி

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 9

சமூக வலைத்தளங்களில் 17 வீதமான கணக்குகள், உரிமையாளர்களை உறுதிப்படுத்தக்கூடியவையாக இல்லை. அவ்வாறான கணக்குகள் மூலம், நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய போலித்தகவல்கள் பரப்பப்படுகின்றன. இதனைத் தடுப்பதற்கே அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், தகவல் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது சமூகவலைத்தளங்களைக் கண்காணிக்க சிறப்பு சி.ஐ.டி குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூகவலைத்தளங்கள் தொடர்பில் மூன்று வாரங்களுக்கு முன்னரே அமைச்சரவைப் பத்திரமொன்று முன்வைக்கப்பட்டது. பயன்பாட்டில் உள்ள சமூக வலைத்தளங்களில் 17 வீதமானவைக்கு உரிமையாளர்கள் இல்லை. அவ்வாறான சமூக வலைத்தளங்கள் ஊடாகவே, ஏதேனுமொரு விதத்தில் நாட்டுக்கு, மக்களுக்கு, சமாதானத்துக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்தியா, ஆஸ்திரேலியா மற்றும் ஐந்து நட்சத்திர ஜனநாயக நாடுகளில் கூட சமூக ஊடகங்களுக்கென வரையறைகள், சட்டத்திட்டங்கள் உள்ளன. போலித் தகவல்கள் பரப்படுகின்றமை தொழில்சார் ஊடகவியலாளர்களுக்கும் பெரும் சவாலாக உள்ளது. எனவே, தொழில்சார் ஊடகவியலாளர்களை பாதுகாப்பதும் இதன் நோக்கமாகும். இதனை முன்னிட்டு தொழில்சார் ஊடகவியலாளர்கள் மகிழ்ச்சியடைய வேண்டும்- என்றார். (எ-4,44)

# கல்வித்துறை பெரும் வீழ்ச்சி தேசிய பாடசாலைகள் எதற்கு?

## ஆசிரியர் சங்கம் விசனம்

கொழும்பு, ஜூன் 9

கொரோனாத் தொற்றால் பாடசாலைக் கல்வி முற்றிலுமாக வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், ஆயிரம் தேசிய பாடசாலைகளை நிறுவ அரசு ஏன் நடவடிக்கை எடுத்துள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவிக்கையில்,

எந்தவொரு அறிவியல் அடிப்படையுமின்றி, ஆயிரம் தேசிய பாடசாலைகள் திட்டத்துக்கு சில பாடசாலைகள் தேர்வுசெய்யப்பட்டுள்ளன. இது தோல்வியுற்ற திட்டமாகும்.

அரசியல்வாதிகளின் விருப்பத்தின் அடிப்படையில் சில பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளன. மாகாண சபைகளால் உருவாக்கப்பட்ட நகரங்களில் உள்ள பாடசாலைகளை மட்டும் தேர்ந்தெடுப்பது சிக்கலானது- என்றார். (எ-4)

# 1,000 தேசிய பாடசாலைகள் திட்டம் வியாழன்று ஆரம்பம்

கொழும்பு,ஜூன் 9

நாட்டில் சகல வசதிகளுடன் கூடிய ஆயிரம் தேசிய பாடசாலைகளை அமைக்கும் வேலைத்திட்டம் நாளை வியாழக்கிழமை ஆரம்பிக்கப்படும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில். இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்காக 750 க்கும் மேற்பட்ட மாகாணப் பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என்றும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)



# போலிச் செய்தியை யார் தீர்மானிப்பது?

## அரசிடம் கேள்வி

கொழும்பு, ஜூன் 9

போலிச் செய்திகளை சமூக ஊடகங்களில் பதிவிடுபவர்களைக் கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுத்தமை சரியானது. ஆனால் போலிச் செய்திகளை யார் தீர்மானிக்கப் போகின்றார்கள் என்று, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன கேள்வி எழுப்பினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்.

அரசின் இந்த முடிவு தொடர்பில் நாங்கள் கவலை தெரிவிக்கின்றோம்.

அரசு கொரோனாத் தொற்றை மறைப்பதற்கு எடுக்கும் கடுமையான முயற்சிகளின் மற்றொரு வடிவமாக இதனைப் பார்க்கின்றோம்.

கொரோனாக் கட்டுப்பாட்டை கடுமையாக்குகின்றோம் என்ற போர்வையில் போலிச் செய்திகளை இப்போது குற்றமாக்கியுள்ளது.

செய்திகள் போலியானவை என்று யார் தீர்மானிக்கின்றார்கள்?

போலிச் செய்திகள் ஊடாக மாற்றுக் கருத்துக்கள் முன்வைப்போரை அடக்கவே அரசு முற்படுகின்றது. அதேவேளை கொரோனாத் தொற்றுத் தொடர்பில் போலித் தகவல்களைப் பரப்பும் அரசின் பிரதிநிதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பார்களா? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். (ஏ.5.இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# முகக்கவசம் உயிர்க்கவசம்



முகக் கவச பொறி முறையில் கவனம் வேண்டும். சட்டம், தண்டனையால் மட்டும் இதைக் கட்டுப்படுத்த முடியாது. இங்கு விழிப்புணர்வுடன், பொறுப்புணர்வும் தேவை.

சி.நற்குணலிங்கம்

கொரோனாவுக்கு எதிரான போரில் முகக் கவசம் அல்லது முகமறைப்பு அணிவது கட்டாயம். போர்க் காலத்தில் தேசிய அடையாள அட்டையைப்போல் தற்போது முகக்கவசம் வைத்திருப்பதும், பொது இடங்களில், வெளியே செல்லும் போது பயன்படுத்துவதும் அவசியமாயிற்று. எனினும் முகக்கவசம் அணிவது, குறைந்தது 02 மீற்றர் இடைவெளியை பராமரிப்பது அல்லது கைகழுவுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு மாற்றாக அமையாது. 12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளும் முகக்கவசம் அணிய வேண்டும் என உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தியுள்ளது. 5 அல்லது அதற்கு குறைவான வயதுள்ள குழந்தைகள் முகக்கவசம் அணியும் தேவையில்லை என சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. 6 முதல் 11 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளாக இருந்தால், அவர்கள் வாழும் அல்லது இருக்கும் பகுதியில் வைரஸின் தாக்கத்தைப் பொறுத்து முகக்கவசம் அணிந்துகொள்ளலாம்.

இவர்கள் முகக்கவசம் அணிவதை மட்டும் பெரியவர்கள் கவனிக்காது அவற்றை நீக்குவதிலுல் கவனம் செலுத்த வேண்டும். உடல்நலப் பிரச்சினைகள் உள்ள 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மருத்துவ ரீதியான முகக்கவசங்களை அணிய வேண்டும். முகக்கவச விதிகளை மீறுவோருக்கு அபராதம், தண்டனை வழங்கப்படும்போதும் அதை மீறுவோரும் அதிகம் உள்ளனர். முகக் கவசங்களை அகற்றும் முறைகளும் முக்கிய பிரச்சனையாக உள்ளன. இதன்மீது அரசு செலுத்தும் கவனம் குறைவாகவே உள்ளது.

கொரோனா கிருமிப் பரவலை தடுப்பதற்காக முகக்கவசம் அணிவதற்கு வலியுறுத்தப்பட்டாலும் பலர் அதனை அலங்காரமாகவும் அணிந்துகொள்ள தொடங்கியுள்ளனர்.

விதம் விதமான முகக்கவச உற்பத்திகள் வரத் தொடங்கியுள்ளன.

மீண்டும், மீண்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவசம், ஒரு நாளைக்கு மட்டும் பயன்படுத்தக்கூடிய முகக்கவசம் என வகை வகையான முகக்கவசங்கள் உள்ளன. ஒருமுறை மட்டும் பயன்படுத்தப்படும் முகக் கவசங்க ளின் விற்பனை அதிகரித்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் முழுமையாக முடிவடைய இரண்டு ஆண்டுகள் ஆகலாம் என உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார். தடுப்பூசி பயன்படுத்தினாலும் இந்தச் சுகாதார முறையிலிருந்து விடுபட முடியாது.

துணியினாலான முகக்கவசங்கள் காற்றை வடிக்கும் திறன் குறைந்தவை. அவை புதிய வைரஸை தடுக்கக் கூடியவை அல்ல. உண்மையில் முகக்கவசத்தை அணிவதில் காட்டும் அக்கறைபோல் அவற்றை அகற்றுவதிலும் காட்ட வேண்டும்.

ஆனால் எதிர்பார்க்கும் அளவுக்கு அணிவதிலும், முறையாக அகற்றுவதிலும் மக்கள் அக்கறைகாட்டுவதில்லை. ஒருமுறை மட்டுமே பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் முகக்கவசங்கள் சுற்றுச்சூழலுக்கு அதிக அச்சுறுத்தலை ஏற்படுத்த ஆரம்பித்திருக்கின்றன. சுற்றுச்சூழல் பற்றிய அக்கறை மக்கள் மத்தியில் தாழ்ந்துவிட்டது என்று எண்ணத் தோன்றுகின்றது. நாளொன்றுக்கு 50 ஆயி ரத்துக்கும் அதிகமான முகக்கவசங்கள் ஆறுகள், நீரோடைகள் மூலமாக கடலில் கலக்கின்றன. இதனால் கடலுக்குச் செல்வோருக்கும் கொரோனாத் தொற்று ஏற்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. கடல் வாழ் உயிரினங்களுக்கும், கடல்சார் சூழலுக்கும் பெரும் பாதிப்பை விளைவிக்கின்றன. இதில் கூடுதல் கவனம் செலுத்தாதவிடத்து சுற்றுலாப் பயணிகளின் வருகையையும் பாதிக்கக்கூடும்

தினமும் ஐந்து லட்சம் முகக்கவசங்கள் இலங்கையில் பயன்படுத்தப்படுகின்றன. 2020ஆம் ஆண்டு 1.5 பில்லியன் அளவான முகக்கவசங்கள் கடலுடன் கலந்துள்ளன என்று சமுத்திர சுற்றாடல் அதிகார சபை தெரிவித்துள்ளது. அந்த முகக்கவசங்களின் எடை 5 ஆயிரம் தொன் என்பது கணக்கு.

பயன்படுத்தப்பட்ட முகக்கவசங்கள் விஞ்ஞான முறைப்படி அழிக்கப்படாததால் பிரச்சினை மேலும் அதிகரிக்கும் அபாயம் எழுந்துள்ளது. பொது இடங்களில் இவற்றை வீசாது தனியாக சேகரித்து துப்பரவுத் தொழிலாளர்களின் ஆரோக்கியம் பாதிக்கப் படாதவகையில் அவர்களிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். முகக் கவசத்தை இரண்டு நாள்கள் வெயிலில் வைத்து, சுடுநீரில் நனைத்து பின்னர் ஒப்படைப்பதால் கிருமிகள் பரவுவதைக் கட்டுப்படுத்தலாம். அல்லது பாதுகாப்பான முறையில் எரியூட்டலாம். எரியூட்டும்போது வரும் வாயுவால் பாதிப்பு இல்லாவகையில் உயரமான புகைபோக்கி மூலம் வாயுவை வெளியேற்றுவது சிறந்ததாகும். வெட்டவெளியில் எரியூட்டுவதைத் தவிர்க்க வேண்டும். முகக்கவசங்களை அகற்றும் பொறிமுறையில் கவனம் வேண்டும். சட்டம், தண்டனையால் மட்டும் இதைக் கட்டுப்படுத்த முடியாது. இங்கு விழிப்புணர்வு டன், பொறுப்புணர்வும் தேவை.



> கொரோனா கிருமிப் பரவலை தடுப்பதற்காக முகக்கவசம் அணிவதற்கு வலியுறுத்தப்பட்டாலும் பலர் அதனை அலங்காரமாகவும் அணிந்துகொள்ளத் தொடங்கியுள்ளனர். விதம்விதமான முகக்கவச உற்பத்திகள் வரத் தொடங்கியுள்ளன.

சுற்றுச்சூழலை தனிமனிதன் இயற்கைச்சூழலுக்காகவும், மனிதனின் நன்மைக்காகவும் பாதுகாக்க வேண்டும்.

சூழல்மாசடைதல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான பிரச்சினையாகும். சூழலுக்கு ஊறுவிளைவிக்காது சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தின்மீது கவனம் செலுத்தவேண்டும். இவற்றைச் சேகரித்தல், கொண்டுசெல்லல் மற்றும் நீக்குதல் ஆகிய செயற்பாடுகளில் உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்பு முக்கியமானவையாகும்.

நகர்ப்புறம், கிராமப்புறம், குடியிருப்பு இடங்கள் மற்றும் தொழிலகங்கள் போன்ற ஒவ்வொரு நிலைகளிலும் கவனம் ஈர்க்கப்பட வேண்டும். இதை அகற்றும் பணியாளர்களுக்கு, உடமைகளுக்கு பாதிப்போ, அச்சுறுத்தலோ, இடையூறோ ஏற்படுத்தாதிருப்பதை உரிய அமைப்பு உறுதிசெய்து கொள்ள வேண்டும். இக்கழிவு அகற்றும் பணிகள் தடைப்படாததுமான ஒழுங்கான முகாமைத்துவம் இருக்க வேண்டும்.

இந்த முகக்கவசம் அணிவதிலும், நீக்குவதிலும் காட்டப்படும் முக்கியத்துவத்தைப் பொறுத்தே முகக்கவசம் உயிர்கவசமாக கருதப்படும். நமக்கான உலகத்தை நாம்தான் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நயினை...

அறிவித்துள்ளனர்.
தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று சூழ்நிலை காரணமாக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 6ஆம் திகதி திருவிழாவை நடத்துவது என்று தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
நாளை 10ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருந்த ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் நடத்துவதற்கு முன்னர் தீர்மானம் எடுக்கப்பட்டிருந் தது.
இந்த நிலையில் நேற்றுக் காலை அவசரமாக கூடிய ஆலய அறங்காவலர் சபையினர் குறித்த தீர்மானத்தை எடுத்துள்ளனர். (ம-ஜ.20)

## ஊடகவியலாளர்களை...

அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:
இலங்கையில் கொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களில் பெரும்பாலானோர் கீழ் தரமாக பணியாற்றிய ஊடகவியலாளர்கள்' என சுகாதார அமைச்சின் பிரதிநிதியாக மருத்துவர் ஹேமந்த ஹேரத் கருத்து வெளியிட்டுள்ளமை அதிர்ச்சியை தோற்றுவித்துள்ளது.
தாம் சார்ந்த மக்களுக்காக வடக்கிலும் கிழக்கிலும் கொழும்பிலுமாக 39 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டோ அல்லது காணாமலோ கடந்த காலங்களில் ஆக்கப்பட்டுள்ளனர்.
கூலிக்காக மாரடிக்கும் மருத்துவர் ஹேமந்த ஹேரத் போன்றவர்களைத் தாண்டி, உன்னதமான ஊடக சுதந்திரத்துக்காக களப்பலியான ஊடகவியலாளர்களை அவமானப்படுத்தும் மற்றும் நிந்திக்கும் விதத்தில் கருத்துக்களை எவரும் முன்வைக்க அருகதையற்றவர்களென யாழ். ஊடக அமையம் கருதுகின்றது.
ஊடகவியலாளர்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட கொலைகள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமை, தாக்கப்பட்டமைக்கு இன்று வரை நீதி கிடைக்காமைக்கு பிரதான காரணமாக அமைவது ஆட்சியாளர்களுக்கு வளைந்து கொடுக்காமையும், நீதி விசாரணை தொடர்பில் முன்னிறுத்த பின்னடிப்பதுமேயாகும்.
கடந்த ஜூன் 3 ம் திகதி சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நிகழ்ந்த செய்தியாளர் மாநாட்டைத் தொடர்ந்து, சுகாதார அமைச்சின் ஊடக செய்தித் தொடர்பாளர் என்ற ரீதியில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்கள் தொடர்பாக தெரிவித்த கருத்து ஊடக சமூகத்தின் மத்தியில் மிக்க சீற்றத்தை தோற்றுவித்துள்ளது.
உன்னதமான ஊடக சுதந்திரத்துக்காகக் களப்பலியான ஊடக நண்பர்களுக்கு நீதி கோரி யாழ். ஊடக அமையம் சமரசமின்றி நீண்டகாலமாக போராடிவருகின்றது. இந்த நிலையில் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்த கருத்துக்கள் எம்மையும், பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர்களின் குடும்பத்தினரையும் ஆழ்ந்த வேதனைக்குள்ளாக்கியுள்ளன.
அரசின் ஒரு பொறுப்பான அதிகாரியாக தெரிவித்த கருத்து அரசினது கருத்தாகவே கருதப்படுவதால் இது தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியாலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடமும், ஊடக சமூகத்தினரிடமும் பொறுப்பு கூறவேண்டியவராக மருத்துவர் ஹேமந்த ஹேரத் உள்ளார் என்பதை யாழ். ஊடக அமையம் சுட்டிக்காட்ட விரும்புகின்றது - என்றுள்ளது. (ம)

## முதல் தடவையாக...

ரவு இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.
ஒரே நாளில் வெளியிடப்பட்ட அதிக மரணங்களின் எண்ணிக்கையாக நேற்றைய அறிவிப்பு அமைந்துள்ளது.
மே 10ஆம் திகதி முதல் மே 31ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 15 கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளன. அத்துடன், ஜூன் 2ஆம் திகதி முதல் ஜூன் 7ஆம் திகதி வரை 39 கொரோனா சாவுகள் பதிவாகியுள்ளன.
இவ்வாறு உயிரிழந்தவர்களில் 22 பெண்களும், 32 ஆண்களும் உள்ளடங்குகின்றனர். இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோர் எண்ணிக்கை ஆயிரத்து 844ஆக அதிகரித்துள்ளது. (ம-22)



# அதிபர் மக்ரோனை நெருங்கி முகத்தில் அறைந்த இளைஞர்

### உலகளவில் பரபரப்பு

பாரிஸ், ஜூன் 9
இளைஞர் ஒருவர் பிரான்ஸின் அதிபர் மக்ரோனின் முகத்தில் அறைந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. நேற்றுப் பிற்பகல் நடந்த இந்தத் தாக்குதல் தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பிரான்ஸில் உணவகங்கள் நேற்றுத் திறக்கப்பட்டன. இதை முன்னிட்டு உணவகங்களது உரிமையாளர்களை மக்ரோன் நேற்றுச் சந்தித்தார். இதன்போதே அவர் தாக்கப்பட்டார். மக்ரோனைத் தாக்கியவர் தீவிர வலதுசாரி சிந்தனையுள்ளவர் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.
துட்சிகளின் படுகொலைக்கு ஹூட்டுக்களுக்கு பிரான்ஸ் வழங்கிய ஆதரவும் ஒரு காரணம் என்று மக்ரோன் அண்மையில் ஏற்றுக்கொண்டு றுவாண்டாவிடமும் துட்சிகளிடமும் மன்னிப்புக் கோரியிருந்தார். இந்தப் பின்னணிக்கும் குறித்த தாக்குதலுக்கும் தொடர்புள்ளதா என்ற கோணத்திலும் விசாரணை முடுக்கிவிடப்பட்டுள்ளது. (ம)


உ
கணபதி துணை

## ஆயக்கடவை சித்தி விநாயகர் தேவஸ்தானம் புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம் வருடாந்த மஹோற்சவம் பற்றிய விஷேட அறிவித்தல்

தற்போதைய நாட்டின் கொவிட் 19 பெரும் தொற்று சூழ்நிலையை கருத்தில் கொண்டும் எம் ஊர்மக்கள், அடியவர்களின் சுகாதார பாதுகாப்பை கருத்தில் கொண்டும் 14.06.2021 ஆரம்பிக்கப்பட இருந்த மஹோற்சவம் தற்காலிகமாக பிற்போடபட்டுள்ளது.
எம் பெருமானின் திருவருள் துணைகொண்டு பெரும் தொற்று குறைவடைந்த பின்னர் சுகாதார பிரிவு வழிகாட்டலுக்கு அமைவாக எதிர்வரும் மாதங்களில் மஹோற்சவம் இடம்பெறும்.
மஹோற்சவம் (திருவிழா ) ஆரம்பிக்கும் திகதி, மாதம் பின்னர் அறியத்தரப்படும்.

பா.சுந்தரராஜசர்மா
ஆதீனகர்த்தா
ஆயக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
புன்னாலைக்கட்டுவன்.



## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் நயினாதீவு 2021 உயர்திருவிழா

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலின் 2021ஆம் ஆண்டுக்கான உயர்திருவிழா நாளை 2021.06.10ஆம் திகதி கொடி யேற்றத் துடன் ஆரம்பமாகி 2021.06.25 ஆம் திகதியன்று தெப்போற்சவத்துடன் நிறைவுபெற திருவருள் கைகூடியபோதும் நாட்டில் ஏற்பட்டுள்ள COVID-19 அசாதாரண சூழ் நிலையின் காரணமாக உயர்திருவிழாவினை இடைநிறுத்தி பிறிதொருபட்சத்தில் உயர்திரு விழாவினை செய்வதென தீர்மானித்துள்ளோம் என்பதனை அறியத் தருகின்றோம்.

அறங்காவலர் சபை
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
நயினாதீவு



## கேள்வி அறிவித்தல் தலைவர் பெறுகைகள் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, கிளிநொச்சி

1. தலைவர் மாவட்ட பொதுவைத்தியசாலையின் பெறுகைக்குழு, கிளிநொச்சி அவர்கள், கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான/பொருட்களுக்கான தற்போது தகமையுடையோரும் தகைமை பெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டிகேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. கேள்வியாளர்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தில் (ICTAD) கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை அல்லது அதற்குமேல் பதிவுசெய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர், இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் பகுதி IV இலும் மேலதிக தகவல்கள் பகுதி V (Section V) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329/0212284111 ) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன், இம் முகவரியில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்விஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **07.05.2021ம் திகதி முதல் 14.06.2021ம்** திகதிவரை மு.ப 9.00 மணிதொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் கீழ்வரும் அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் **14.06.2021 ம்** திகதியன்று முற்பகல் 10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொதுவைத்தியசாலை, A9வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் ஒவ்வொரு வேலைகளுக்குமான கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

| No | Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In without VAT | Grade | Contract Period | Non Refund | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Validity Period |
| 01 | NP/DGH KOC/2021/ W/07 | பராமரிப்பு அலகு புனரமைப்பு | 692,341.00 | C9 or 8 | 60 days | 500.00 | 7000.00 | 24.07.2021 |
| 02 | NP/DGH KOC/2021/ W/08 | உணவுப் பகுதி கட்டு மாணம் | 1,963,185.97 | C9 or 8 | 90 days | 1000.00 | 20,000.00 | 24.07.2021 |

05.05.2021 திகதி அன்று மேற்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டது. நாட்டின் சூழ்நிலை காரணமாக காலநீடிப்புச்செய்யப்பட்டு **14.06.2021** முடிவுறுத்ததல் காலத்தின் பின் உடனடியாக திறக்கப்படும்.
தலைவர்,
பிராந்திய பெறுகைக்குழு,
மாவட்ட பொதுவைத்தியசாலை,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் வியாபாரிகளிடம் நேற்றுத் திடீர் சோதனை

யாழ்ப்பாணம், ஜூன் 9
யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் நேற்றுத் திடீர் சோதனை நடத்தப்பட்டது.
யாழ். மாவட்டச் செயலரின் கட்டளைக்கமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் வடமாகாண உதவிப் பணிப்பாளரின் வழிகாட்டலுக்கமைவாகவும் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தர்களால் சண்டிலிப்பாய், தெல்லிப்பழை பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட நடமாடும் மரக்கறி வியாபாரிகளிடம் விலை தொடர்பான கள ஆய்வுகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன.
இதன்போது விலை காட்சிப்படுத்த வேண்டும் என்ற அறிவுறுத்தலும் வழங்கப்பட்டது. மேலும் 'ஒன்லைன்' மூலம் வீடுகளுக்கு பொதிசெய்யப்பட்ட பொருள்களை விநியோகிக்கும் வியாபார நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டதுடன் விலை தொடர்பான விசாரணைகளும் மேற்கொள்ளப்பட்டன. (ம)




## ஓராண்டு நினைவஞ்சலி

பிறப்பு 15.01.1938 — இறப்பு 21.05.2020

**சிவஸ்ரீ.சின்னச்சாமிக்குருக்கள் சண்முகலிங்கம் ஐயர்**

(ஆதீனகர்த்தா, ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்)
விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு.

திதி: 09.06.2021

ஓடி மறைந்தது ஓராண்டு உமைஇழந்து
வாடிநிதம் கலங்குகின்றோம் உமைப்பிரிந்து

எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மாறாது
உம் நினைவுகள் எம்மனதிலிருந்து....

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

**சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர்**



மண்டைதீவு, 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், மண்டைதீவு, நீர்கொழும் பினை வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை கிறிஸ்தோப்பர் நேற்று முன்தினம் (07.06.2021) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற ஞானப்பு சூசைப்பிள்ளை மற்றும் அன்னரத்தினம் (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கிறகோரி - வில்விந்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஆன்மேரி டொப்சனின் ( மனோன்) பாசமிகு கணவரும், விக்ரறின் (வினோ-பிரான்ஸ்), கத்தறின் (தனோ- எழுவைதீவு), டானியல் அருண்குமார் (நீர்கொழும்பு), டானியல் அருண்ராஜ் (பிரான்ஸ்), டானியல் கமல்ராஜ் (யாழ்ப்பாணம்), கரோலின் (பவா-நீர் கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமல்ராஜ் (பிரான்ஸ்), தோமஸ் ஸ்ரீபன் (பிரான்ஸ்), றொபின்சியா (நீர்கொழும்பு), மரியதர்சினி (பிரான்ஸ்), ஜெனிஸ்ரெலா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரகாசராசா (கிளமென்ற்- பிரான்ஸ்), மேரிதாஸ் (பிரான்ஸ்), மேரிறோஸ் (மாதகல்), பாலன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெயசீலன் மற்றும் ஜெயரட்ணம் (கனடா), சகாயன் (அன்ரனி-பிரான்ஸ்), லீமா றோஸ் (லண்டன்), லில்லி றோஸ் (ராகினி-லண்டன்), அன்ரன் (பிரான்ஸ்), ஹென்றி (கனடா), நிஷாந்தி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஜெறா (பிரான்ஸ்), ஜோதி (பிரான்ஸ்), ராஜினி (பிரான்ஸ்), வினித்தா (பிரான்ஸ்), சாந்தி (பிரான்ஸ்), செல்வராசா (மாதகல்), மரியதாஸ் (லண்டன்), பெரிய சூரியர் (லண்டன்), கொலின் (லண்டன்), சுசி (கனடா), மஞ்சுளா (சூட்டி- கனடா), காலஞ்சென்ற நீற்றம்மா மற்றும் ஜெயா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மைத்துனியும், தர்மசகாயம்பிள்ளை (மண்டைதீவு), செல்வம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகலையும், நிந்துஜா (பிரான்ஸ்), அனோஜன் (பிரான்ஸ்), சிந்துஜா (பிரான்ஸ்) தொம்சிகா (எழுவைதீவு), தொம்சனா (எழுவைதீவு), தொமஸ்ரீனா (எழுவைதீவு), அன்சிகா (பிரான்ஸ்), அகசிகா (பிரான்ஸ்), அஷ்விகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நேற்று (08.06.2021) செவ்வாய்க்கிழமை நீர்கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டு இன்று (09.08.2021) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் அமைந்துள்ள, வைற் கவுஸ் மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மு.ப. 10.00 மணிக்கு மண்டைதீவிலுள்ள அன்னாரின் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பி.ப 2.00 மணிக்கு மண்டைதீவு புனித பேதுருவானவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, மண்டைதீவு புனித பேதுருவானவர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
மண்டைதீவு.

தொடர்புகளுக்கு :
மனோன் - 077 048 2072
வினோ - 0033781391830
தனோ - 077 804 3854
அருண் - 077 691 0996
அருண்ராஜ் - 0033651977714
[illegible] - 077 344 [illegible]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றின்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தொடர்ச்சியாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், அதனால் ஏற்படும் உயிரிழப்புக்களும் அதிகரித்துச் செல்கின்றன. இலங்கையில் கொரோனாத் தொற்றின் வேகம் இன்னமும் குறையவில்லை. நாள்தோறும் தொற்றாளர்களின் எண்ணிக்கை சராசரியாக 2 ஆயிரத்து 500 ஐக் கடக்கின்றது. அதேவேளை, தொற்றுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கையும் நாள்தோறும் சராசரி 40ஐக் தாண்டுகின்றது.

எனவே, நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவும் தீவிரமான சூழ்நிலை இல்லை என்பது நிபுணர் குழுக்களுடன் பகுப்பாய்வு செய்யப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும். தற்போது காணப்படும் பரிந்துரைகளின்படி, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயணக் கட்டுப்பாடு எதிர்வரும் 14ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கும்.

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமை தொடர்பில் ஆராய்ந்ததன் பின்னர் நிபுணர்கள் குழுவுடன் பேச்சு நடத்தி, கொரோனா அபாயம் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னரே பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும்.

தனிமைப்படுத்தப்பட்டிருந்த 77 கிராம அலுவலர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டாலும் அந்தப் பகுதிகளில் கொரோனாத் தொற்று பரவும் அபாயம் உள்ளதன் காரணமாக அந்தப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏனைய பகுதிகளுக்கு பயணிக்க அனுமதி வழங்கப்படாது- என்றார். (ம-ஒ,5,22)

## நேற்று...

ளது. இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு இலட்சத்து 10 ஆயிரத்து 616ஆக எகிறியுள்ளது.

வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்து 568ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 78 ஆயிரத்து 259ஆக உயர்வடைந்துள்ளது. (ம-22)

## வடக்கில்...

ளது. அதேநேரம் அன்டிஜென் சோதனைகளில் 27 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கண்டறியப்பட்ட தொற்றாளர்களில் அதிகளவானோர் இணுவிலில் முடக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்கள்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 223 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 9 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

நேற்றுப் பகல் 560 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 31 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்றுப் பகல் 193 மேற்கொள்ளப்பட்ட சோதனையில் 24 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

**யாழ்ப்பாணம்**

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 26 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 5 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒருவருக்கும் என 37 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவருக்கும், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் 3 பேருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், பளை பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும் என 8 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**மன்னார்**

மன்னார் நகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும், நானாட்டான் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் என 9 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் 4 பேருக்கும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருவருக்கும் என 6 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

வவுனியா தெற்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், ஓமந்தை ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தில் ஒருவருக்கும் என 4 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**அன்டிஜென் சோதனை**

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்தப்பட்ட அன்டிஜென் சோதனையில் 27 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மருதங்கேணி பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், நல்லூர் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேருக்கும், சங்கானை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், கோப்பாய் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 4 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (மஓ,5)

## பயணத்தடை...

என்னவெனில், மக்களைப் பாதாளத்தில் தள்ளியது மட்டுமே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை குறித்த விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

'கொரோனாத் தடுப்பூசிகள் மூலம் மேற்குலக நாடுகள் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆனால், இலங்கையால் இந்தக் கொரோனாத் தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்ய முடியாமைக்கு அரசின் இராஜதந்திர கொள்கையின் பலவீனமே காரணமாகவுள்ளது.

இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளை எதிர்த்து சீனாவின் பக்கம் இலங்கை நிற்பதால் கொரோனாத் தடுப்பூசிகளை இந்த நாடுகள் இலங்கைக்கு வழங்கப் பின்னடிக்கின்றன. முதலில் தடுப்பூசிகளை வழங்கிய இந்தியா தற்போது வழங்க மறுத்துவிட்டது.

கொழும்புத் துறைமுகக் கடற்பரப்பில் கப்பலொன்று தீப்பிடித்து எரிந்தபோது இலங்கை இந்தியாவின் உதவியைக் கேட்டது. ஆனால், இந்தியா முழுமனதுடன் உதவவில்லை. இந்தியா நினைத்திருந்தால் அந்தக் கப்பலின் தீயைக் கட்டுப்படுத்தியிருக்க முடியும். இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் தவறே இந்தியா இவ்வாறு வேண்டாவெறுப்பாக செயற்படக் காரணம்' - என்றார். (ம-22)

## நுண்கலைக்கழக...

விண்ணப்பித்த மாணவர்களுக்கான அனுமதி தெரிவுப் பரீட்சைகள் இணைய வழியாக இடம்பெறவுள்ளன.

நாட்டின் தற்போதைய சூழ்நிலைக்கேற்ப அனுமதிக்கான தெரிவுப் பரீட்சைகளை மாற்று ஏற்பாட்டின்படி இணைய வழியாக நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுடனான கூட்டத்தின் பின்னர் தீர்மானித்துள்ளது.

அந்தத் தீர்மானத்துக்கு அமைய யாழ். பல்கலைக்கழகத்தால் நுண்கலைமாணி (பரதம்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதிக்கான தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமையும், நுண்கலைமாணி (சங்கீதம்) கற்கை நெறிக்கான இணைய வழி அனுமதிக்கான தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 15 ம் திகதி செவ்வாய்க்கிழமையும், நுண்கலைமாணி (சித்திரமும் வடிவமைப்பும்) கற்கை நெறிக்கான இணையவழி அனுமதிக்கான தெரிவுப் பரீட்சைகள் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமையும் ஆரம்பமாகவுள்ளன.

பரீட்சை நேர ஒழுங்குகள் மற்றும் பரீட்சைக்கான இணைய நிகழ்நிலை இணைப்பு பற்றிய விபரங்கள் யாழ். பல்கலைக்கழக அனுமதிகள் கிளையினால் பதிவுசெய்த மாணவர்களின் மின்னஞ்சல் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பருத்தித்துறையில்...

பட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் இருவர் தமது 50ஆவது பிறந்த நாள் நிகழ்வை கடந்த ஞாயிறு மற்றும் திங்கள் கிழமைகளில் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு முரணாக மக்களைத் திரட்டி நடத்தியுள்ளனர். அத்துடன் குழந்தையைத் தொட்டிலிடும் நிகழ்வையும் சிலர் சட்டத்துக்கு முரணாக நடத்தியுள்ளனர். குறித்த பகுதியில் கோயிலொன்றில் பொங்கல் நிகழ்வுகளும் அதிகளவானோருடன் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதையடுத்தே மேற்படி நிகழ்வுகளை ஏற்பாடு செய்தவர்களுக்குக்கடும்எச்சரிக்கைவிடுக்கப்பட்டதுடன் அதில் கலந்துகொண்டவர்கள் 14 நாள்கள் கட்டாய சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இந்த நிகழ்வுகளில் ஒன்றில் அமைச்சர் ஒருவரும் கலந்துகொண்டார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-26)

## மோசமான...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக் கடலில் தீப்பிடித்த 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் இரகசியமாகவோ அல்லது சட்டவிரோதமாகவோ இலங்கைக் கடற்பரப்பில் நுழையவில்லை. மோசமான காலநிலை காரணமாகவே கப்பல் தீப்பிடித்திருக்க வேண்டும். குறித்த கப்பல் ஒவ்வொரு மாதமும் இலங்கைக்கும் ஏனைய நாடுகளின் துறைமுகங்களுக்கும் செல்லும் கப்பல். தீப்பிடித்த இந்தக் கப்பல் சிங்கப்பூரில் ஆரம்பித்து ஆறு நாடுகளுக்கு பயணிக்கும் கப்பலாகும். மே 17ஆம் திகதி வரவேண்டிய கப்பல் மோசமான காலநிலை காரணமாக இரு நாள்களுக்குப் பின்னர் வந்தது.

இதில் ஆயிரத்து 466 கொள்கலன்கள் இருந்தன. அதில் 513 கொள்கலன்கள் இலங்கையில் இறக்கிவைக்கப்பட வேண்டியவையாகும். ஆகவே, இது ஒரு இரகசியக் கப்பல் என எவரும் கூற முடியாது. அதேநேரம், கப்பல் விபத்துக்குள்ளானதை அறிந்துகொண்டவுடன் இலங்கைக் கடல் எல்லையைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடலில் எதுவிதமான இரசாயனங்களும் கலக்கக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். கடலில் கலக்கப்பட்ட கழிவுகளை நாம் முழுமையாக அகற்றும் நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

எதிர்வரும் மூன்று நாள்களுக்குள் எமது கடல் பரப்பை முழுமையாகச் சுத்தப்படுத்தி விடுவோம். அதேபோல் இழப்பீடு பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், அதை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியாது. எனினும், இடைக்கால இழப்பீடு ஒன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்து வருகின்றோம்' - என்றார். (ம-22)

## மடுத் திருவிழாவில்...

முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும், பக்தர்களின் நலன் கருதி திருப்பலிகளை ஒளிபரப்ப தொலைக்காட்சி அலைவரிசைகள் உதவ வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.

மடுப் பெருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடி மாதம் 2ஆம் திகதி திருவிழாத் திருப்பலியுடன் நிறைவுபெறும். இந்தத் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மன்னார் மாவட்டச் செயலர் தலைமையில் நேற்று இடம்பெற்றது. இதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை மேற்படி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மடுத் திருவிழாத் திருப்பலியை வெளி மாவட்ட பக்தர்களின் பங்கேற்பு இல்லாமல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலையான ஒரு அறிவிப்பு.

ஆனால், பக்தர்களின் நலன்கருதி திருப்பலிகளையும், நவ நாள்களையும் நேரலையில் ஒளிபரப்ப தொலைக்காட்சி நிறுவனங்கள் உதவ வேண்டும். வழமைபோன்று இம்முறையும் ஆயர்களின் தலைமையில் இந்த விழா இடம்பெறும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை, குரு முதல்வர் அருட்பணி அ.விக்ரர் சோசை அடிகளார், மடு ஆலய பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார், மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.வினோதன், மன்னார் மேலதிக மாவட்டச் செலர் எஸ். குணபாலன், மடு சுகாதார வைத்திய அதிகாரி ராஜன் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ம-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின்

# இரசாயனக் கசிவு தகவல் மின்னஞ்சல் அழிக்கப்பட்டது!

## சி.ஐ.டி. விசாரணையில் அம்பலம்



கொழும்பு, ஜூன் 9

எம்வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இரசாயனக் கசிவு ஏற்பட்டுள்ளமை தொடர்பில் கப்பலின் கப்டனால், இலங்கை முகவருக்கு அனுப்பப்பட்ட மின்னஞ்சலை இலங்கை முகவர் அழித்துள்ளமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் (சி.ஐ.டி.) விசாரணையில் அம்பலமாகியுள்ளது.

இந்த விடயத்தை சட்டமா அதிபர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் மாதவ தென்னகோன் தெரிவித்தார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பான முறைப்பாடு மீதான விசாரணைகள் கொழும்பு மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

'கப்பலின் கப்டன் தீ விபத்து ஏற்படுவதற்கு 10 நாள்களுக்கு முன்னதாக கொள்கலன் ஒன்றில் இரசாயனக் கசிவு ஏற்பட்டுள்ளதைக் கண்டறிந்துள்ளார். அவர் இந்த விடயத்தை, கப்பலின் இலங்கை முகவருக்கு மின்னஞ்சல் ஊடாகத் தெரியப்படுத்தியுள்ளார். பின்னர் அந்த மின்னஞ்சல் அழிக்கப்பட்டுள்ளது' என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்ததுடன், மின்னஞ்சல் தரவுகளை ஆராய்வு செய்ய அனுமதி கோரினார்.

அதற்கு அமைவாக, கொழும்பு மேலதிக நீதிவான் பெரேரா உள்ளூர் முகவர் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருக்கு அதன் மின்னஞ்சல் தரவுத்தளங்களை குற்றவியல் புலனாய்வுத் துறையிடம் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைக்க உத்தரவிட்டார்.

எவ்வாறாயினும், இலங்கை கடலுக்குள் நுழைவதற்கு முன்னர் கப்பலில் உள்ள இரசாயனக் கசிவு குறித்து உள்ளூர் முகவர் அறிந்திருக்கிறாரா என்பது இன்னும் தெளிவாகத் தெரியவில்லை.

கொழும்புத் துறைமுக அதிகார சபைக்கு மே மாதம் 19ஆம் திகதி உள்ளூர் முகவர் அனுப்பிய தகவலில், கப்பல் பாதுகாப்பானது என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் மே மாதம் 20ஆம் திகதி கப்பல் தீப்பற்றி எரிந்துள்ளது.

இதேவேளை, கடல் மாசு தடுப்புச் சட்டத்தின் கீழ் பிரதானமாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு இந்த விவகாரத்தில் விசாரணைகள் இடம்பெரும் நிலையில், அச்சட்டத்தின் 12 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் சந்தேக நபர் ஒருவர் தொடர்பில் செயற்படும் நீதிமன்ற அதிகாரம் மேல் நீதிமன்றத்துக்கே உள்ள நிலையில், நீதிவான் நீதிமன்றத்துக்கு அவ்வதிகாரம் இல்லை என்று சுட்டிக்காட்டியே நீதிவான் கப்பல் கப்டன் மற்றும் உள்ளூர் முகவர் ஆகியோரை நீதிமன்றில் முற்படுத்தும் பிரதி சொலிசிட்டர் ஜெனரலின் கோரிக்கையை நிராகரித்தார்.

### கடற்படைக்கு உத்தரவு

குற்றப் புலனாய்வுப் பிரிவின் கோரிக்கைக்கு அமைவாக கப்பலுக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குமாறு இலங்கைக் கடற்படையினருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். எனினும் இதன்போது கப்பலை கடற்படையின் பொறுப்பில் வைத்திருக்க விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்த நீதிவான், பல்வேறு தரப்புக்களும் கப்பலுக்கு சென்று விசாரணை நடாத்த தேவைப்படுமிடத்து முறையான அனுமதி உத்தரவைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என கட்டளையிட்டார். (ஒ.5.இ)

கப்பல் நிறுவனத்திடமிருந்து

# அதிகூடிய இழப்பீட்டை பெற்றுக்கொள்வோம்

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 9

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதால் ஏற்பட்ட சகல பாதிப்புக்களுக்கும், முழுமையான நஷ்டஈட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பான விசேட சந்திப்பு நீதி அமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சட்டமா அதிபர் திணைக்களத்தால் எடுக்கப்படும் சட்ட நடவடிக்கைகளுக்காக, சட்டமா அதிபருக்கு பூரண ஒத்துழைப்பைப் பெற்றுக்கொடுப்போம். இதற்காக துறைசார் நிபுணர்களின் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்படும். அதிகூடிய நஷ்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நீதியமைச்சர் தெரிவித்தார்.

கப்பல் தீப்பற்றியதால் நாட்டின் பொருளாதாரம், சூழல் கட்டமைப்பு மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு ஏற்பட்ட பாதிப்பு ஆகியவற்றை, நிவர்த்தி செய்வதற்கான சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது இந்தக் கலந்துரையாடலின் அடிப்படை நோக்கமாக அமைந்திருந்தது.

கலந்துரையாடலில், துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரோஹித அபேகுனவர்தன, மீன்பிடி இராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டர். (எ-4)

# நெடுஞ்சாலையால் புதிய வீடுகள்

கொழும்பு, ஜூன் 9


புதிய களனிப் பாலத்திலிருந்து அதுருகிரிய வரையிலான நான்கு வழிப்பாதை கொண்ட அதிவேக நெடுஞ்சாலை அமைப்புக்காக வீடுகளை இழக்கும் மக்களுக்கு புதிய வீடுகள் அமைத்துக்கொடுப்பதற்கு அமைச்சரவை இணங்கியுள்ளது. சுமார் ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு இவ்வாறு புதிய வீடுகள் வழங்கப் படவுள்ளன. (ஒ.5.இ)

# 17 கடலாமைகள் இதுவரை இறப்பு

கொழும்பு.ஜூன் 9

இலங்கைக் கடற்பரப்பில் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீப்பற்றியதை அடுத்து, இதுவரை 17 கடலாமைகள் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ளன என்று வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. கல்பிட்டி முதல் ஹம்பாந்தோட்டை வரையான கரையோரப் பகுதிகளில் இறந்த நிலையில் ஆமைகள் மீட்கப்பட்டன.

அதேவேளை மூன்று டொல்பின்கள் இறந்த நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கரையொதுங்கியுள்ளன. இது தொடர்பில் நீதிமன்றில் விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-4)



# ஆபத்துக்களை உணர்ந்தே இரசாயன உரத்துக்கு தடை

## அரசுக்கு ஒத்துழைக்குமாறு எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 9

இரசாயன உரப்பாவனையால் ஆரோக்கியமற்ற சமூகமொன்று உருவாகி வருகின்றது. இது மிகவும் ஆபத்தானதொரு நிலையாகும். இதனைத் தடுத்து நிறுத்தவே, சேதனைப்பசளை முறைக்கு விவசாயத்தை நகர்த்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் விவசாய அமைச்சின் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரசாயன உரப் பாவனையால் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்துக்கு ஏற்படும் ஆபத்தான நிலையை ஆய்வுகள் மூலம் உணர்ந்து, அந்தச் செயற்பாடு கைவிடப்பட்டு வருகிறது. உலகில் 187 நாடுகள் சேதனைப்பசளை முறையை நோக்கி நகர்ந்துள்ளன.

2017 ஆம் ஆண்டு 4 லட்சம் மெற்றிக் தொன் இரசாயன உரம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வருடத்துக்கு 1.2 மில்லியன் மெற்றிக் தொன் இரசாயன உரம் அவசியம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கடந்த 4 வருடத்தில் 300 சதவீதத்தால் இரசாயன உரப்பயன்பாடு நாட்டில் அதிகரித்துள்ளது.

இது மிகவும் அவதானமிக்க நிலையாகும். இரசாயன உரப் பயன்பாடு அதிகரித்தும் உற்பத்திகள் அதிகரிக்கவில்லை. விவசாயம் செய்யும் நிலப்பரப்பும் அதிகரிக்கவில்லை. எமது நாட்டில் 15 லட்சம் ஹெக்ரேயர் நிலப்பரப்பில் தான் விவசாயம் செய்யப்படுகின்றது. என்றாலும் அதில் தற்போது உற்பத்திசெய்யப்படுவது 13 லட்சம் ஹெக்ரேயர் தான்.

தற்போது அடுத்த போகத்துக்குத் தேவையான உரத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை உரிய நேரத்தில் பெற்றுக் கொடுப்போம்.

இரசாயன உரத்துக்கான தடையால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படவும் இடமளிக்கமாட்டோம். மக்களுக்கு நச்சுத் தன்மையற்ற உற்பத்திப் பொருள்களை வழங்குவதே எமது நோக்கமாகும்.

சிறுநீரக நோய்க்கு இரசாயன உரம் காரணம் என்பது ஆய்வுகளில் உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் சிறுநீரகத்தைப் பாதுகாக்க வேண்டும். வடமேல் மாகாணத்தில் 25 சதவீதமானவர்களுக்கு நீரிழிவு நோய் உள்ளது. இதுபோன்று பல நோய்கள் இரசாயன உரப் பாவனையால் ஏற்பட்டுள்ளன.

ஆகவே, இதனை அரசியல் மயப்படுத்த வேண்டாம் என்று எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை விடுக்கின்றோம். எமது எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்க வேண்டும். இந்த தேசிய வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைக்குமாறு கோருகிறோம். என்றார். (எ-4,44)

விளம்பரம்: advt@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.